ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

560

560
2-56

27 1956

ஸ்ரீ வீரராகவன் (திருவள்ளூர்)

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 82

2. சௌசம் 86

[ஸ்ரீ. உப. ஆயுர்வேதரத்நம், பண்டிட்,
மே. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]

3. தேச உலக ரக்ஷை 89

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

4. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் 93

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

5. மஹாவீரவைபவம் 97

[ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

6. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 101

7. ஸம்சய பரிஹாரம் 105

[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

8. செய்திகள் 106

9. புஸ்தக விமர்சம் (அட்டை 3-வது பக்கம்)

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ஞு சித்திரை மீ { ஸஞ்சிகை 4

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

மதமும் அரசாங்கமும்

நமது அரசாங்கம் மதசார்பற்றது. (Secular State). மத விஷயங்களில் நடு நிலைமை வகிக்கும். மதச்சடங்குகளில், கொள் கைகளில் தலையிடாது குறிப்பிட்ட மதங்களுக்குச் சலுகைகள் காட்டாது. இவைகளிலெல்லாம் நாம் பெருமைப் படுகிறோம் அல்லவா! ஆனால் மதஸம்பந்தப் பட்ட அறநிலையங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மதச்சார்பற்ற அரசாங்கத்துக்கு அறநிலையங் களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எப்படி ஏற்படுகிறது என்பது நமக்குப் புலப்பட வில்லை. மதத்தலைவர்களுக்கோ, மதச்சடங்கு களுக்கோ, மதப்பிரசாரத்திற்கோ கவலைப் படாத அரசாங்கம், அறநிலையங்களைப் பாது காக்கும் பெரும் பொறுப்பை ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதும் நமக்குப் புலப் படவில்லை.

அறநிலையங்கள் கெட்டுவிடும், அதற்கு ஏற் பட்ட ஸ்தாவர, ஜங்கம ஸொத்துக்கள் துர் விநியோகம் செய்யப்படும், அவைகளைத்தடுக்க நாம் முன்வந்துள்ளோம் என அரசாங்கம் கூற லாம். இப்மாதிரியான கார்யங்களைச் செய் வதற்கு நாட்டில் ஏற்கனவே உள்ள சிவில், கிரி மினல் சட்டங்களே போதுமானவைகள். இவைகளுக்கென்று ஓர் தனிப்பட்ட சட்டம் தேவையில்லை. அது ஸம்பந்தமான ஏராள மான பணச்செலவும் தேவையில்லையே. மதப் பற்று இல்லாத அரசாங்கம் ஏன் ஓர் சட்டம் இயற்றவேண்டும். இந்த சட்டத்தை அமுலுக் குக் கொண்டுவரவும், அது ஸம்பந்தமான கார் யங்களை நிர்வஹிக்கவும் ஓர் தனி அரசாங்க இலாகாவையும் ஏன் ஏற்படுத்தவேண்டும்?

மதச்சார்பற்ற அரசாங்கத்தில் அறநிலையப் பாதுகாப்பு இலாகா எவ்வளவு பொருத்தமுள் ளதாக இருக்கிறதென்பதை நாம் எல்லோரும் நன்கு அறிய முடிகிறது. இந்த இலாகாவின் நிர்வாஹச்செலவையும் அறநிலையங்களே கொடுக்கவேண்டும். அரசாங்கத்தின் பொது வருமானத்திலிருந்து ஒரு பைசாகூட கொடுக் கப்படமாட்டாது. மதப்பற்றில்லாத அர சாங்கமல்லவா! எப்படி மதஸம்பந்தமான இலாகாவுக்கு செலவு செய்யமுடியும்!

மற்றொரு விந்தையையும் நாம் காண்கிறோம். அரசாங்கம் மதத்திற்கு செலவு செய்யக் கூடாது. இது எல்லோருக்கும் பொதுவான கொள்கையாகிவிட்டது. ஆனால் மதஸ்தாபனங் களும், தேவாலயங்களும் தர்மஸ்தாபனங் களும், தங்கள் வருமானத்தில் குறிப்பிட்ட அம்சத்தை இந்த இலாகாவிடம் ஒப்புவித்தல் அவசியமாம். இந்தத் தொகையிலிருந்து மேலே குறிப்பிட்ட இலாகா நிர்வாஹம் நடப்பதோடு, ஒரு பொது சேமிப்புத் தொகையும் ஏற்படுத் தப்படும். இந்த சேமிப்பிலிருந்து சிறிய தேவாலயங்களுக்கு உதவியளிக்கப்படும்.

பொருளாதாரத் துறையில் ஸமதர்மக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படுவதுபோல், ஆலயங்களிலும், தர்மஸ்தாபனங்களிலும் கூட இந்த ஸமதர்மக் கொள்கை கடைபிடிக்கப்படு கிறதுபோலும். இத்துடன் அரசாங்கத்தின் பொறுப்பு தீர்ந்துவிடக்கூடாதாம். ஆலயங் களின்வருமானத்திலிருந்தும்தர்மஸ்தாபனங் களின்வருமானத்திலிருந்துக் கிடைக்கக்கூடிய தொகையை ஒன்று சேர்த்து அந்த தொகை உபரியைதேசநலனுக்கும்உபயோகிக்கவேண்டும்

என்பதும் சில அரசியல் வாதிகளின் கொள் கையாகிறது. எவ்வளவுசெலவுசெய்யவேண்டும் எவ்வளவுதொகையை உபரியாக சேமிக்கவேண் டும் என்ற விஷயங்களையும் வகுக்கும் அதிகார மும் இந்த இலாகாவிடம் இருக்கிறது. தேச நலன் என்பது ஸமூஹத்திலுள்ள ஒவ்வொரு வரின் நலனுமாகும். குறிப்பிட்ட மதத்தின் ஸொத்தை, தனிப்படுத்தி அந்த மதத்தின் விரோதிகளுக்குக் கூட பங்கிட்டுக்கொடுக்கும் முறைதான் இது. இம்மாதிரியான கார்யங் கள் எல்லாம் மதசார்பற்ற அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருப்பதும் விந்தையே. ஸமூஹத்தில் உள்ள பல் வேறு மதத்தினர், மதப்பற்றில் லாதவர், மதத்வேஷிகள், எல்லோரும் ஒன்று கூடிய ஓர் சட்ட சபையில் மதத்தின் நலனுக் கென்றே ஏற்பட்ட ஆலயங்கள், தர்ம ஸ்தா பனங்கள் இவைகளின் நிர்வாஹங்களையும், ஸொத்தையும், எப்படி செலவு செய்யவேண் டியது எவ்வளவு செலவு செய்யவேண்டியது என்றெல்லாம் தீர்மானம் செய்கிறார் கள். இவர்களுடைய தீர்மானங்களே ஸரியான வைகள், நியாயமானவைகள், ஒப்புக்கொள்ளக் கூடியவைகள் என்றெல்லாம் வாதிக்கின்றனர். மதத்தலைவர்களுக்கும், மதப்பற்றுள்ளவர்களுக் கும் இவ்விஷயங்களில் அதிகாரமில்லையாம். சிறு குழந்தைகளுக்கு எவ்வித ஆஹாரம் தகுந்ததென்று டாக்டர்களும், பெரியோர் களும் கூறுவதுபோல், மதத்தலைவர்களுக்குக் கூட தெரியாத மதப்பற்றுள்ள விஷயங்கள் இப்பெரியோர்களுக்கே தெரியும் எனக்கூறும் ஸமூஹத்தை நாம் என்ன என்று எண்ணு வது.

அரசியல் உறிமை ஷாத்துக்களுக்கும் புலப் பட்டதாகத் தோன்றவில்லை இம்மாதிரியான மதசிகித்ஸை. ஆங்கில அரசாங்கத்தை நிலை நிறுத்தவேண்டி மதவிஷயங்களில் தாங்கள் ப்ரவேசிப்பதில்லையென்று ஆங்கில அரசியும். அரசர்களும் ஸ்வதந்த்ரம் அளித்திருந்தார்கள். சிறிதளவு ஸ்வாதந்த்ரயம் ஏற்பட்டவுடன் நம் நாட்டினர் இவ்விஷயங்களில் தலையிடவாரம் பித்தனர். கிருஸ்துவமதத்தைப் பின்பற்றிய வர் ஆங்கில அரசர்கள். மதப்பற்றே இல்லாத வர்கள் நம் அரசியல் அதிகாரத்தில் உள்ள பெரும்பாலோர். ஆதலால்தான் மதசம்பந்த மான கார்யங்களுக்கென்று அரசாங்கப் பொது வருமானத்தைச் செலவு செய்யக்கூடாதென் கிறார்கள்.

மற்றொரு விந்தையையும் நாம் காண்கிறோம்; அறநிலைய பாதுகாப்பென்பது நமது ஹிந்து மதத்துக்கு மட்டில் தான். முகமதிய, கிருஸ் துவ, பௌத்த, ஜைனமதஸ்தாபனங்களுக் கல்ல. ஏன் இம்மாதிரியான ஓர் அதிசய நிலை ஏற்படவில்லை என்று நாம் ஸுலபமாக அறிய முடிகிறது. நம் மதத்தினருக்கு மதத்தின் அபிவ்ருத்தியில் பற்றுதல் எவ்வளவு இருக்கிற தென்பதுதான். அந்நிய மதத்தினர் தங்கள் மதங்களில் பற்றுதலுடன் இருக்கின்றனர். ஆனால் நாமோ “எல்லா மதமும் ஸம்மதமே” என்ற ஓர் உயர்ந்த கொள்கையைக் கூறிக் கொண்டு, எல்லா மதத்தைக் காட்டிலும், ஓர் விலக்ஷணமான மதத்தை உண்டாக்க முயல் கிறோம். இதன் முடிவுதான் என்ன? மதம் என்பதே இல்லாமல் அழிவதுதான். மதம் இருந்தால் அன்றோ அதன் கொள்கைகளைஏற் பதும், புறக்கணிப்பதும். ஒவ்வொருவர் மன த்தில் தோன்றுவதும் மதம் என்ற கொள் கையைப் பின்பற்றினால் மதமின்மைதான் முடிவாகும்.

தனிப்பட்ட மதஸ்தாபனங்களின் உறிமை யையும் போக்கடிக்கக்கூடிய நிலையில் கார்யங் கள் நடந்து வருவதையும் நாம் தினமும் பார்த்து வருகிறோம். அரசியல் ஜீவாதார உறி மையில் தனிப்பட்டோர்கள் மதஸம்பந்தமான ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, நிர்வஹித்துவர அதிகாரம் ஏற்பட்டிருந்தபோதிலும், அந்த ஸ்தாபனங்களின் வருமானத்திலிருந்தும் குறிப்பிட்ட தொகையையும் அரசாங்க அற நிலைய பாதுகாப்பிலாகாவுக்குக் கொடுக்கவேண் டுமாம். ஸ்தாபனங்களில் ஏற்பட்ட தர்மங்களை யும், மதப்ரசாரங்களையும் நடத்துவதற்கே போதிய பணவசதியில்லாத தருணத்தில் இம் மாதிரியான கட்டணங்களை விதித்தல் மதப் பற்றை அபிவ்ருத்தி செய்வதற்காகவா?

சிறிய தேவாலயங்களில் வருமானத்துக்கு ஸம்பந்தமில்லாதவகையில் நிர்வாஹ அதிகாரிகளை நியமனம் செய்தும், அவர்களுக்குச் சம்பளம் தேவஸ்தான வருமானத்திலிருந்து கொடுக்கும்படியாக சட்டமியற்றியதும் எந்த நிலையில் மதத்தை சீர்திருத்த உபயோகப்படும் என்பதை ஆஸ்திகர்கள் யோசித்துப் பார்த்தலவசியம்.

மதச்சார்பற்ற அரசாங்கம் இந்த முயற்சிகளுடன் நிற்பதில்லை. பொது வருமானத்திலிருந்து மதவளர்ச்சிக்குப் பணவுதவி கொடுக்கவியலாது என்று கூறும் அரசாங்கம், புத்த ஜயந்திக்கும், அது ஸம்பந்தமான மற்றைய விழாக்களுக்கும், கோடிக்கணக்கான ரூபாயை பொது வருமானத்திலிருந்து செலவு செய்ய ஏற்பாடுகள் செய்து வருவது எந்த அரிசியல் கொள்கையில் சேர்ந்தது என்பது நமக்கு விளங்கவில்லை.

தனிப்பட்ட ஆஸ்திகர்கள் தங்கள் முன்னேர்களால் வகுக்கப்பட்ட வழிகளில் ஈடுபட்டு, அம்மாதிரியான புராதன ஸம்ப்ரதாயங்களில் செலவு செய்வதற்கென்று ஒதுக்கி வைத்த மூலத்ரவ்யங்களையெல்லாம் பற்பலவித கட்டணங்கள் மூலமாக அரசாங்க இலாகா பெற்றுக்கொண்டு, தங்கள் கருத்துக்குத்தக்கபடியான தர்மங்களுக்குச் செலவு செய்வது என்பது எந்த அரசியல் தர்மம். அதுமட்டில் அல்ல. பொதுஜனநலன் எவை என்று அரசியல் வாதிகள் எண்ணுவார்களோ, அந்தக் கார்யங்களுக்கே செலவு செய்வது என்பதும் எந்த விதத்தில் சரியான கொள்கை. தர்மம் செய்ய ஆசையுள்ள ஒருவன் தன் மார்க்கத்தில் காணப்படும் கடையில் உள்ள தேங்காயை, அதற்கேற்பட்ட விலையைக் கொடுத்து வாங்காமல், தானகவே எடுத்துச்சென்று மார்கத்தில் காணப்படும் ஓர் தேவதைக்கு நிவேதனம் செய்வதற்கு ஒப்பாகும் நவீனகால நாகரிகத்தின் நிலை.

பல்லாண்டு பல்லாண்டுகளாக ஆன்மீகத் துறையில் முன்னேறியுள்ள நமது முன்னேர்களால் ஏற்படுத்தப்பட்ட தர்ம ஸ்தாபனங்களும், அதைத் தொடர்ந்தே நமது பெரியோர்களால் நாளடைவில் சேமிக்கப்பட்ட தர்ம ஸ்தாபன சொத்துக்களும், இவ்வித கைங்கர்யத்தில் ஈடுபடாதவர்களாலும்; நம்பிக்கை இல்லாதவர்களாலும், தங்கள் மனம் போனபடி விநியோகிக்கப்படுவது என்பது நியாய வாதிகள் ஒப்புக்கொள்ளக்கூடியதா?

ஒவ்வொரு தர்ம ஸ்தாபனத்துக்கும் ஏற்பட்டுள்ள சொத்து அதில் விசேஷ ச்ரத்தை உள்ளவர்களால் கொடுக்கப்பட்டதால் அந்த ஸ்தாபனத்தின் கொள்கைகளை ப்ரகாசப் படுத்த உபயோகப்படுத்துவதே நியாயமாகும். அந்த தர்ம ஸ்தாபனத்தின் சொத்துக்களை மற்றொரு தர்மஸ்தாபனத்தின் அபிவிருத்திக்காக உபயோகிப்பது கூடப்பொருந்தாது. அப்படியிருக்க தேவலாயங்களின் வருமானத்தையும், தர்ம, மத, ஸ்தாபனங்களின் உபரி வருமானத்தையும் ஸமூஹ நலன் என்ற பெயரில், அரிசியல் துறையில் உள்ளவர்கள் தங்கள் மனத்திற்குத் தோன்றிய முறையில் செலவு செய்வதற்கு உறிமை அளிப்பது நியாயமே இல்லை.

ஹிந்து மதம் நீங்கலாக இதரமத ஸம்பந்தமான விஷயங்களில் புது சீர்திருத்தக் கொள்கைகளைக் கையாளாத, மதசார்பற்ற அரசாங்கம் பொது வருமானத்திலிருந்து ஹிந்து மதத்தையும், தர்ம, மத, ஸ்தாபனங்களையும் நிலை நிறுத்த, பொருளுதவி செய்யாத அரசாங்கம், பொது வருமானத்தை மற்றைய மத ப்ரசாரத்துக்கு உபயோகப்படுத்துவது என்பது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல.

பண்டைகாலந்தொட்டு மஹனீயர்களால் ஏற்படுத்தப்பட்டு புராண, ப்ரஸித்தமானதும், மதப்ரவாத்தனத்துக்கென்றே பாடுபட்டு வருவதுமான தர்மஸ்தாபனங்களில் யாதொரு வித உதவி செய்யாவிடினும், தலையிடாமல் அரசாங்கம் இருக்குமாயின் அதுவே மதப்ரவர்த்தனத்துக்கு ஓர் பேருதவி செய்ததாகும்.

இந்த ஸ்தாபனங்களுக்கென்று ஏற்பட்ட மஹான்கள் தங்களுடைய வைதிக ஸமூஹத்திற்கு எவ்விதமான நலனைச்செய்யவேண்டும் என்பதை நன்கு அறிவர்.

தங்களுடைய மதத்தை ப்ரகாசப்படுத்துவது, சிஷ்யர்களுக்கு அறிவைப் புகட்டுவது, அதற்கென்று ஏற்பட்ட உயர்ந்த ஸித்தாந்த ரஹஸ்ய க்ரந்தங்களையும், ஸ்தோத்ரக்ரந்தங்களையும் தினசர்யை போன்ற புஸ்தகங்களையும் வெளியிடுதல், இவைகளைப் படித்தறிவதற்காக பற்பலவிதமான கல்விஸ்தாபனங்களை நம் நாட்டில் ஆங்காங்கு ஏற்படுத்துவது, அவைகளில் தகுந்த ஆசிரியர்களை நியமித்தும், சரியான பாடதிட்டங்களை வகுத்தும், கார்யங்களைச் செவ்வனே நடத்தி வருவது, ஆங்காங்கு தர்மோபதேசங்களைச்செய்துகொண்டு அடிக்கடி நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள சிஷ்யர்களிடமும், இதர ஆஸ்திகர்களிடமும் பக்தி ச்ரத்தையை உண்டாக்கி வருவது போன்ற பல நற்காரியங்கள் நமது மதத்தலைவர்களாகிய மஹான்கள் செய்து வருகிறார்கள் என்பதில் ஸந்தேஹமிருக்க முடியாது.

சரீரநோய்க்கு, சரீர ஆராய்ச்சியில் பயின்ற வைத்தியன் மருந்து கொடுப்பதுபோல், மனப்பயிற்சிக்கு ஆன்மீகத்துறையில் ஆராய்சி செய்து அநுபவம் வாய்ந்த மஹான்கள்தான் ஆவன செய்யமுடியும். ஆன்மீகத்துறையில் அநுபவம் இல்லாதவன் ஆன்மீக வளர்ச்சிக்கு உபதேசம் செய்வதும், அவன் உபதேசத்தை பின்பற்றுவதும், வைத்ய அநுபவம் இல்லாதவன், "மலச்சிக்கல் உள்ளவனுக்கு நேர்வாளக்காயை"க் கொடுத்து உதவுவது போல் ஆகும்.

அரசியல் வாதிகள் தங்கள் ஆராய்ச்சியை அரசியல் துறையுடன் நிறுத்திக்கொண்டு, ஆன்மீகத்துறையில் இறங்காமல் இருப்பது நல்லது.

தவிரவும் ஆந்மீகத்துறையில் உள்ளவர்களைத் தடை செய்வதும், அவர்களுக்கு உபதேசம் செய்ய முற்படுவதும், ஆந்மீக வளர்ச்சிக்கு உலைவைப்பதேயாகும்.

இனியாவது நமது ஸமூஹத்தினர் மதப்பற்றுடன் வைதிகாசாரங்களைக் கடைப்பிடித்து நல்வழியில் செல்ல முயன்றால், நமக்கு ஏற்பட்டிருக்கும், இனியும் ஏற்படவிருக்கும் பற்பல இன்னல்களைத் தவிர்க்க முடியும். இறைவன் இதற்கு உதவுவான். நமது ஆசார்யர்களின் அநுக்ரஹமும் பூர்ணமாக ஏற்படும்.

—o—

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷ விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும் போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

சௌசம்

(சௌசம் அல்லது பாரிசுத்யம்)

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆப்யந்தர சௌசம்

சரீரத்தின் பாஹ்யசௌசமென்கிற வெளிப்புற சுத்தியைப் பற்றியும், அதனுல் ஏற்படும் குணங்களைப்பற்றியும் இதற்கு முன் விஷய விசாரம் செய்யப்பட்டது. தோஷங்களால் உடலின் உட்புறம் பாதிக்கப்படாது இயற்கை நிலைமையில் இருந்து வந்தாலன்றி, பாஹ்ய சௌசத்தை நெறி தவருது நிறைவேற்றியும் பயன் காணுவது அரிது. ஆகவே ஆப்யந்தர சௌசம் என்கிற உடலின் உட்புற சுத்தியை பற்றி அனைவரும் நன்கு அறிந்து, அச்சௌசத்தை நிறைவேற்றும் வகைகளை இனி விளக்குவோம். குடல்கள், மூச்சு விடும் அவயவங்கள், இரத்த நாளங்கள் முதலியவை இங்கு ஆப்யந்தர அவயவங்களாகும்.

ஆயுர்வேதசாஸ்திரப்படி குடல்களைக் கோஷ்டம் என்று வழங்குவோம். அது ஸூக்ஷ்மாந்திரம், ஸ்த்தூலாந்திரம் (சிறு குடல், பெருங்குடல்) என்று இரண்டு பிரிவுகளாய், சுமார் இருபத்தைந்து அடி நீளமாய் நமது உதரத்துக்குள் அடங்கி யிருக்கிறது. அது ஜீவசக்தியுடன் கூடிய வெகு நீண்ட சோஷ்டம் அல்லது குழாய் ஆகும். உரக்குஹரம் என்கிற மார்பறைக்குள் புப்புஸங்கள் என்னும் இரண்டு ச்வாஸப் பைகள் அடங்கியுள்ளன. இவற்றுள் கோஷ்டத்திற்குள் உடற் போஷணைக்கான உணவு உட்சென்று ஜீர்ணமாகவும், உணவின் கழிவுகளான மலபாகம் வெளிவரவும் அவசியமான இயற்கை அமைப்புகள் உண்டு. அதுபோலவே இரத்தசுத்தி முதலியதைச் செய்து நமக்கு ஜீவசக்தி யளிக்கும் சுத்த வாயு உட்புகுந்து பரவவும், இரத்தம் முதலியதிலுள்ள அசுத்தம் நிச்வாஸம் என்கிற வெளி மூச்சு வழியாய் வெளிவரவும் அவசியமான இயற்கை அமைப்பு புப்புஸங்களில் உண்டு. உணவு முதலியதால் உற்பத்தியாகும் உதிரம் (சுத்த ரத்தம்) ஊடுருவிப் பாய்ந்து ஸகல தாதுக்களையும் (உட்புற தேஹத் தொகுதிகளை) போஷிக்க தமனிகள் (சுத்த ரத்தக் குழாய்களும் என்னும்குழாய்களும், தாதுக்களிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்கள் (மலங்கள்) கரைந்து வெளிப்படுவதற்காக ஸிரைகள் (அசுத்த ரத்தக்குழாய்கள்) என்னுமிரத்தக் குழாய்களும் அமைந்துள்ளன. ஆப்யந்தர சௌசத்தைப்பற்றி அறிவதற்கு ஆப்யந்தர அவயவங்களான கோஷ்டம் முதலியவற்றைப் பற்றி இச்சுருக்கமான விஷயங்களையும் சிறிது அறிந்திருக்க வேண்டுமெனக் கருதி இதை இங்கு எழுதலானேன். ஆசார சீலராயிருப்பவர் ச்ருதி ஸ்ம்ருதி முதலியவற்றிற் கூறிய விதிகளைக் கருத்துடன் பராபரிப்பது போல வைதிகக் கொள்கைகளுக்கு வைதர்ம்யம் நேரிடாதபடிக்கு முற்காலத்து முனிவர்கள் இயற்றிய ஆயுர்வேத சாஸ்திரத்திலுள்ள ஆரோக்யாதாரமான ஆசார நியமங்களையும் அறிந்து அதன்படி அனுஷ்டிக்கவும் ஆற்றலுள்ளவராயிருப்பது விமர்சகர்களான விவேகிகள் உவக்கக் கூடியதாகும்.

ஆமதோஷம் என்னும் அசுத்தம்

உணவுகளின் வைஷம்யத்தினுலும், ஜீர்ண வேலையிலுண்டாகும் ஏற்றத்தாழ்வுகளாலும், உச்வாஸ நிச்வாஸங்களில் ஏற்படும் ஊழலாலும் உடலுக்குள் ஆமதோஷம் என்னும் ஒரு வகை விஷம் உண்டாய் பல கோளாறுகளை விளைவிக்கும். அவ்விஷம் எத்தகையதென்பதை இங்கு நான் விளக்க உத்தேசிக்கவில்லை. அது சரீரத்திற்குக் கேடு செய்யும் ஒரு கச்மல தோஷம் என்று மாத்திரம் அறிந்திருத்தல் போதுமானது. அத்தோஷம் உண்டாகாமலிருக்க நாம் புஜிக்கும் போஜனம் பத்தியமா

னதாகவும், பரிசுத்தமானதாகவும், மிதமானகவும் இருத்தல் வேண்டும். நாவை அடக்கியாளவேண்டும்; உணவின் சுத்தாசுத்தங்களையும் குணதுணங்களையும் பகுத்தறிந்து உண்ணவேண்டும்; அவ்வித உணவுதான் உடலின் சுத்திக்கும் வன்மைக்குமுவந்ததாகு' மென்பதை அடியில் வரும் வசநம் விளக்குகிறது:—

'நசாபல்யாதவிஜ்ஞாநாதநஹாராநுபயோஜயேத் । பரீக்ஷ்ய ஹிதமச்நீயாத் தேஹசுத்திர் பலம் பவேத் ॥'

இது அக்னிவேசமாமுனிவர் உபதேசம். இவ்விதிக்கு மாறாக அசுசியான அல்லது அஹிதமான ஆஹாரங்களை உண்ணும் வழக்கமுள்ளவருக்கு உண்ட உணவு சரிவர ஜீர்ணமாகாது; அரோசகம் காணும்; சரீரம் ஸ்தூலிக்கும்; உடல் வெளிரும்; உடல் பாரமாயிருப்பதாக உணர்ச்சி யுண்டாம், சோர்வு தோன்றும்; கட்டிகள், தழுப்புகள், சொறி, சிரங்கு முதலியவை கிளம்புவதுண்டு. அமைதியின்மையும், ஆலஸ்யமும், பலக்குறைவும் தோன்றும்; சிலருக்கு உடல் இளைக்கும்; வாயில் ச்லேஷ்ம நீரும் பித்த நீரும் ஊறி அருவருப்புஏற்படும். நித்ராபங்கமாவது நீண்ட நித்திரையாவது உண்டாகும்; சிலருக்கு ஆண்மைக் குறைவும், மதி மயக்கமும், துஸ்ஸ்வப்னங்களும் தோன்றும்; சரீரகாந்தி மழுங்கும்; போஷணை தரும் ஔஷதாஹாரங்களாலும் இவ்விகாரங்கள் விலக மாட்டா. இவ்வனைத்தும் உடலுக்குள் சச்மலம் அடைந்துண்டான 'ஆமதோஷம்' என்னும் விஷத்தின் பயனாக விளையும் விகாரமேயாம்.

கோஷ்டசுத்தி

'இக்கோளாறுகளுக்கு உட்பட்ட மனிதனின் குடலைச் சுத்தம் செய்தாலன்றி ஆமதோஷவிஷம் தீராது. இதற்குக் கோஷ்டத்தின் ஆரம்பபாகமான ஆமாசயத்திலிருந்து (இரைப்பை) அசுத்தங்களை வமநரூபமாக (வாந்தி) மேல் நோக்கியாவது, விரேசநரூபமாக (மலசோதநம்) கீழ் நோக்கியாவது தகுந்த உபாயங்களைக் கொண்டு வெளிப்படுத்திக் குடலைச் சுத்தம் செய்ய வேண்டும். (இதற்கு வைத்தியர்உதவிதேவையிருக்கும்) இச்சோதந முறையினால் கோஷ்டம் சுத்தமானதற்கான அறிகுறிகள் பின்வருமாறு:— ஜாடராக்னிவ்ருத்தியாகும். (பசி தீபநமேற்படும்) கூறிய விகாரங்கள் பெரும்பாலும் தணிந்துவிடும்; ஆரோக்யநிலைமைக்கான அறிகுறிகள் ஏற்படும் வெளிப்புற உடலும் தெளிந்திருக்கக் காணப்படும், அவற்றுடன் இந்த்ரியங்களும் மனதும் தெளிவடையும்' நான் கூறிய இவ்விஷயங்களைப் பிரதிபாதிக்கும் பிரமாண ச்லோகங்கள் பின் வருவன:

'அவிபாகோऽருசி: ஸ்தௌல்யம் பாண்டுதா கௌரவம் க்லம: । பிடகாகோடகண்டநாம் ஸம்பவோऽரதிரேவ ச ॥ ஆலஸ்யம் ச்ரமதௌர்பல்யே தௌர்கந்த்ய மவஸாதக: । ச்லேஷ்ம பித்தஸமுத்க்லேசோ விநித்ரா வாதிநித்ரதா ॥ தந்த்ரா க்லைப்யமபுத்தித்வம் அசஸ்தஸ்வப்நதர்சநம் । பலவர்ணப்ரணாசச்ச ந த்ருப்திர் ப்ரஹ்மணைரபி ॥ பஹுதோஷஸ்ய தாந்யாமவிஷலிங்காநி தஸ்ய து । ஊர்த்வதச்சாநுலோமேந ஹிதா ஸம்சோதந க்ரியா ॥ ஏவம் விசுத்தகோஷ்டஸ்ய காயாக்நிரபிவர்த்ததே । விகாராச்சோபசாம்யந்தி ப்ரக்ருதிச்சாநுவர்த்ததே ॥ பாஹ்யாங்காநி ச சுத்யைவம் சுசித்வம் ப்ராப்நுவந்தி ஹி ॥ இந்த்ரியாணி மநோ புத்திர் வர்ணச்சாஸ்ய ப்ரஸீததி ॥

இது ஆமதோஷம் அதிகரித்துப்போன நிலைமையிற் செய்யவேண்டிய முறை. உடலின் மேல் அடிக்கடி அழுக்குகள் சேருவது போல் குடலின் உள்ளேயும் அவ்விதமே பழைய மலங்கள் சேர்ந்து வரக்கூடுமாகையால் பக்ஷத்திற்கு அல்லது மாதத்திற்கு அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை விரேசநாதிகளால் (பேதியாகும் ஔஷதங்களால்) குடலைச் சுத்தம் செய்து வந்தால் முற்கூறிய அக்நிமாந்த்யாதி விகாரங்கள் உண்டாகாமல், உடல் வலுத்து, தேஹ நிலைமையையும் தெளிவுற்று ஆயுளும் நீடிக்குமென்று வாக்படாதி வைத்தியாசார்யர்கள் கூறுகிறார்கள்.—

மலாபஹம் ரோகஹரம் பலவர்ண ப்ரஸாதநம் பீத்வா ஸம்சோதநம் காலேஷ்வாயுஷா யுஜ்யதே சிரம் ॥

இரத்த சுத்தி

வியவஸ்தை யில்லாத உணவுகளால் கோஷ்டம் (குடல்) அசுத்தமாவதையும், அதன் சுத்தி முறையையும் கூறினேம். அதைவிட இன்னும் ஆழமான இடங்களிற் சேரும் அசுத்தங்களைத் தடுக்கவும் பரிஹரிக்கவும் ஏற்ற உபாயங்களைச் செய்வதுதான் மிகவும் முக்கியமானுப் யந்தர தேஹசுத்தியாகும். முற்கூறிய ஆமதோஷம் குடலிலே மாத்திரம் நிற்காமல், அங்கிருந்து உதிரத்திலும் சேர்ந்து உள் தாதுக்களிலெங்கும் பரவி பல கோளாறுகளை விளைவிக்கும். குடலிற் சேரும் அழுக்குகளை வமநம், விரேசநம் (வாந்தி-மலசோதநம் இவை) இவற்றால் வெளிப்படுத்தி கோஷ்ட சோதநம் செய்வித்தபோதிலும், குடலிலிருந்து இரத்தத்திற் சேர்ந்த தோஷம் ஏற்கனவே உட்டலெங்கும் வியாபித்திருக்குமாகையால் உட்புற உடல் முற்றிலும் சுத்தமாயிற்றென்று கூற முடியாதல்லவா? இவ்விஷயத்தை விவேகிகள் விமர்சித்துணருமாறு சரகர் விதிசோணிதீயம் என்னும் அத்தியாயத்தில் விளக்கிக் கூறுகிறார்:

அத்யாதாநாத் ததா க்ரோதாத் வ்யவாயாதவ்ய வஸ்திதாத் | அஸ்ருக் தோஷை: நரா: சச்வதபி பூதா அசௌசத: || மலிநா ஹாரசீலஸ்ய ரஜோ மோஹாவ்ருதாத்மந: | யதா து ரக்தவாஹீநி ரஸ ஸம்ஜ்ஞாவஹாநி ச || ப்ருதக் ப்ருதக் ஸமஸ்தா வா ஸ்ரோதாம்ஸி குபிதா மலா: | ப்ரதிஹத்யா வதிஷ்டந்தே ஜாயந்தே வ்யாதயஸ் ததா

'மனிதர் அடிக்கடியும் இரத்தம் கெட்டுப்போய் பிணிவாய்பட்டு இன்னலுறுவதற்கமிதமான ஆஹாரமும், அடங்காச் சினங் கொள்வதும், நியமமில்லாத புணர்ச்சியும், உடலில் வேறு வகையில் உட்புற வெளிப்புறங்களின் சௌசம் (சுத்தி) இன்மையும் காரணமாம். [கோபம் முதலிய மனோவிகாரங்களாலாகுமசுசியைப்பற்றி பின்னால் விளக்கப்படும்] அசுத்தமான உணவுகள் இராஜஸ தாமஸ மனோவிகாரங்கள் இவற்றால் தேஹத்தில் தோஷங்கள் மேலிட்டு, அவை இரஸவஹஸ்ரோதஸ்ஸுகளென்கிற நிணநீர்க் குழாய்களையும் (lacteals) தமநிகள் ஸிரைகளென்கிற இரத்தக் குழாய்களையும், ஸம்ஜ்ஞாவஹ நாடிகளென்கிற நரம்பு மண்டலங்களையும் தனித்தனியாகவோ அல்லது அனைத்தையுமோ அடைத்துப் போட்டு இரத்தத்தை அசுத்தமாக்கும் போது வியாதிகள் பலவும் உண்டாகின்றன' என்பது மேலே கூறிய அக்னிவேசரது ச்லோகங்களின் பொருள். ஆயுர்வேத ப்ரவர்த்தகர்களான ஆத்ரேயர் முதலிய முனீச்வரர்கள் விவேகிகள் விச்வஸிக்குமாறு ஆஹார விதிகளையும் ஆசாராநுஷ்டாநாதி முறைகளையுமிவ்வாறு ஸஹேதுகமாக விளக்கினார்கள். ஆனால் ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும், ஆஹ்நிககாரர்களான ஆசார்யர்களும் அதே நியமங்களை 'சௌசமாசரேத்' 'ந பரதாராந் கச்சேத்' 'ந கலஞ்ஜம் பக்ஷயேத்' என்கிற விதமாய் பிரபு ஸம்மிதை என்னும் முறையில் தேஹசுத்தி மநச்சுத்திகளுக்கான நியமங்களை விதித்திருக்கிறார்கள். இவ்வாசார்யர்கள் விஷயதத்துவமுணர்ந்த ஆப்தோபதேசகர்களாகையால் அவர்களிடம் ஹேதுக்களைக் கேட்டு கௌதஸ்குதவாதம் செய்வது தகாதென்று நமது சாஸ்திரஜ்ஞரின் கருத்து.

கோஷ்டமென்கிற குடலிற் சேரும் அழுக்குகளை விரேசநம் வமநம் என்னும் உபாயங்களால் சுத்தி செய்யலாம். வஸ்தி [நிரூஹம் அநுவாஸநம் முதலிய பல வஸ்தி முறைகள் உண்டு; இவற்றை ஆங்கிலத்தில் பொதுவாக எனிமா என்பார்கள்] என்கிற உபாயமும் குடலைச் சுத்தி செய்வதற்கு வெகு எளிதான பிரயோகமாகும். இவை குடலைச் சுத்தம் செய்ய எளிய முறைகளென்பது உண்மை. இரத்தத்திற் சேர்ந்துள்ள மலத்தைச் சுத்தம் செய்வதெங்ஙனம் என்பதையும் விளக்குகின்றேன். அதற்கும் வைத்தியர் உதவியின்றியே வைதிகர் உவக்கும் சில உபாயங்களை சரகர் முதலானோர் கூறியிருக்கிறார்கள். இரக்தத்தில் தோஷம் சேர்ந்திருக்கையிற் காணும் கோளாறுகளைப் பரிஹரிக்க சோதநமுறை, சமநமுறை என்று இரண்டு உபாயங்களுண்டு. சோதநம் என்பது விரேசநம், வஸ்தி [எனிமா] முதலியன. மாதம் ஒரு முறை அல்லது அவச்யமானபோது விரேசநம் [பேதி மருந்து] செய்வது, அல்லது வஸ்தி செய்வது ஆகிய உபாயங்களால் குடலை நன்றாகச் சோதநம் செய்தல் இரத்த தோஷமும் அநேகமாய் வெளியாய் விடும். இச்சோதந முறையினாலும் அநுகூலம் போதிய அளவு ஏற்படவில்லையென்று உணரப்படும்போது லங்கனம் என்கிற சமநமுறையைக் கையாளவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

தேச உலக ரக்ஷை

முகவுரை

நமது நாடு தனது ஆத்மாவை இழக்காமல் முன்போல் விளங்கித் தனது மக்களன்றிக்கே உலகமக்கள் யாவருமே ஸுகமாக வாழ்வதற்குரிய வழியைக் கண்டுப்பிடித்து நிற்பதா? அல்லது அதை இழந்து மற்ற நாடுகள் போலவே சாந்தியென்பது சிறிதுமில்லாமல் ஸர்வகஷ்டங்களுக்கும் உள்ளாவதா? என்ற நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. இதைப்பற்றி சில முக்யமான விஷயங்கள் இங்குக் கூறப்படுகின்றன. இவையெல்லாம் பழைய காலத்து விஷயங்களென்றோ இக்காலத்திற்கு உதவாதவையென்றோ மற்ற எந்தக் காரணத்தினாலோ அநாதரம் செய்யாமல் இதை எல்லோரும் கவனமாகப் படித்து ஆலோசித்து தர்மமார்க்கமழியாமலிருக்க என்ன செயயவேண்டுமோ அதைச் செய்ய உத்ஸாஹம் கொள்ளவேண்டுமென்ற ப்ரார்த்தனை முதலில் செய்யப்படுகிறது.

1. கடமைகள்

ப்ராஹ்மணர்களுக்கு அத்யயனம், யஜனம், தானம் அதாவது வேதம் ஓதுவது, வேள்வி செய்வது, கொடுப்பது என்ற இம்மூன்றும் ஸ்வதர்மமாக, கடமைகளாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஸம்பாதித்தே ஜீவிக்கவேண்டுமென்கிற நிலையில் இருப்பவர்கள் பிறருக்கு அத்யயனம் செய்து வைப்பது, யஜனம் செய்துவைப்பது, பிறர் செய்யும் தானத்தைப் பெற்றுக் கொள்வது, என்கிற இம்மூன்று தொழில்களையும் செய்யலாம். இவை முறையே அத்யாபனம் (ஓதுவித்தல்) யாஜனம் (வேள்வி செய்வித்தல்) ப்ரதிக்ரஹம் (பெற்றுக்கொள்ளுதல்) எனப்படுகின்றன. ஜீவனத்திற்காக அனுமதிக்கப்பட்ட இத்தொழில்களை அவச்யமானால் செய்யலாமேயொழிய செய்தே தீரவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஆனால் முன் கூறிய அத்யயனம், யஜனம், தானம், என்ற இவை அப்படிப்பட்டவையல்ல. இவற்றைச் செய்தே தீரவேண்டும். செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் — பாபம் உண்டு.

2. ப்ரஹ்மசர்ய க்ருஹஸ்த ஆச்ரமங்கள்

எட்டாவது வயதில் உபநயனம் செய்து கொள்ளவேண்டுமென்பது ஸாமான்யமான விதி. இதற்கும் முன்னமேயேகூடச் செய்து கொள்ளலாம். ப்ரஹ்மவர்ச்சஸம் வேண்டுமானால் ஐந்தாம் வயதிலேயே உபநயனம் செய்து கொள்ளலாமென்கிறது சாஸ்திரம். சாஸ்திரங்களில் கூறப்பட்ட நியமங்களோடு வேதாத்யயனத்திற்காக ஆசார்யனிடத்தில் சேர்க்கப்படுவதே உபநயனம் என்பதின் பொருள். இப்படி உபநயனம் செய்யப்பட்ட சிறுவன் ஆசார்யனிருக்குமிடத்திற்குச் சென்று, அங்கு வாஸம் செய்து, ஆசாரங்களோடும், நியமங்களோடும், வேதத்தையும், அதன் அங்கங்களான மற்ற சாஸ்திரங்களையும் கற்று, க்ருஹஸ்தாச்ரமத்தில் தான் அநுஷ்டிக்கவேண்டிய எல்லாக் கார்யங்களுக்கும் உரிய யோக்யதையைப் பூர்ணமாகப் பெறவேண்டும். பிறகு தனது வீட்டிற்கு வந்து மாதா பிதாக்களின் விருப்பப்படி ஒரு கன்னிகையை மணந்து க்ருஹஸ்தனாகி வீட்டில் பிதா அல்லது ஜ்யேஷ்ட ப்ராதா ஜீவித்திருக்கும் வரையில் அவர்களுடைய தர்மாநுஷ்டானங்களுக்கு உதவி புரிந்து, அவர்களுக்கு உள்பட்டிருந்து, அவர்களுக்குப் பிறகு தானே அவற்றைச் செய்துவந்து தனது புத்ர பௌத்ராதிகளும் அவ்விதமே எல்லாவற்றையும் செய்து வரும்படியான யோக்யதையை அவர்களுக்கு உண்டாக்கித் தனது ஜீவனத்தை ஸபலமாக்கி மகிழ்வான்.

3. நித்யகர்மாக்கள்

இப்படிப் பிறப்பே காரணமாக இக்காரியங்களை அனுஷ்டிக்க வேண்டும். தவறினால் பாபமென்று சாஸ்திரங்கள் வெகு அழுத்தமாய் அறிவிக்கின்றன. சில பலங்களை உத்தேசித்துச் சில கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுக்குக் காம்ய கர்மாக்கள் என்று பெயர். அப்பலன்களைப் பெற விரும்புகின்றவர்கள் இக்கர்மாக்களைச் செய்யலாம். விரும்பாதவர்கள் செய்ய வேண்டியதில்லை. அப்படியல்லாமல் ஒரு பலனையும் கோராமல் 'இவற்றைச் செய்யவேண்டும். ஆகையினால் செய்கின்றோம்' என்று கருதியே செய்யவேண்டியவையாகச் சில கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு நித்ய கர்மாக்கள் என்று பெயர். அத்யயனமும், பஞ்ச மஹாயஜ்ஞங்களும் இப்படிப்பட்டவையே. இவற்றைச் செய்யாவிட்டால் மிகுந்த தோஷமுண்டு என்பது கூறப்பட்டது. செய்தால் இஹபர லோகங்களில் சுகமுண்டு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் இந்த ஸுகம் உத்தேச்யமன்று. 'சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன. ஆகையால் செய்யவேண்டும். செய்யாவிட்டால் இஹபரங்களில் மிகுந்த துன்பம் விளையும்' என்கிற எண்ணத்தினாலேயே செய்யப்பட வேண்டியவை.

4. க்ருஹஸ்த ஆச்ரமம் உயர்ந்தது

விரக்தி உண்டாகி க்ருஹஸ்தாச்ரமத்திலிருக்க விருப்பமில்லாமற் போனால் ஸந்யாஸாச்ரமத்திற்குப் போகலாம். அதில் இருப்பவர்கள் அத்யயன யஜன தானங்களைச் செய்ய வேண்டியதில்லை. அவர்களுக்கு வேறு சில தர்மங்கள் உண்டு. அவற்றை அவர்கள் தவறாது செய்து வரவேண்டும். ஆனால் நான்கு ஆச்ரமங்களுக்குள் க்ருஹஸ்தாச்ரமமே உயர்ந்தது என்பது எங்கும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஆச்ரமத்தில் இருப்பவர்களே மற்ற எல்லோரையும் காப்பாற்றக் கூடியவர்கள். ஆகவே இந்த ஆச்ரமத்திலிருந்து அத்யயனம் முதலியவற்றைச் செய்வதே நமது சாஸ்திரங்கள் எல்லாம் மிக முக்யமாகக் கருதி விதித்த தர்மமென்பது விளங்குகின்றது.

5. ஸம்ஸாரபந்தநிவ்ருத்தி அல்லது பிறவிநீத்தல்

இப்படி முறைப்படி ஸ்வதர்மாநுஷ்டானம் செய்து வருகின்றவர்கள் முற்கூறியபடி இஹலோகத்திலும் பரலோகத்திலும் துன்பத்தை அனுபவிக்காமல் ஸுகமாகவே வாழ்ந்து வருவார்கள். ஆனால் பிறப்பு, இறப்பு என்கிற ஸம்ஸாரபந்தத்தில் இருந்தே வருவார்கள். இது அவர்களை விட்டு விலகாது. இறந்த பிறகு இங்கு செய்த தர்மகார்யங்களின் பலனாக ஸுகபோகங்களைப் பெறுவதற்காக தேவலோகத்திற்குச்சென்று பல்லாயிர வருஷங்கள் அங்கு ஸுகாநுபவம் செய்துவிட்டு அதன் முடிவில் மறுபடியும் இவ்வுலகில் வந்து பிறப்பார்கள். பிறந்து வளர்ந்து முதிர்ந்து இறப்பார்கள். இப்படியே இந்த பரம்பரை மேல் மேலும் வந்துகொண்டிருக்கும்.

இப்படி வெகு காலம் சென்ற பிறகு ஒரு ஸமயம் சிலருக்கு 'இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்கு ஏதாவது மார்க்கமுண்டா? உண்டானால் அதைப் பின்பற்றி விடுபடலாமே' என்கிறஆலோசனையும் எண்ணமும் உண்டாகலாம். அவர்கள் ஞானத்தினாலும், சீலத்தினாலும் சிறந்தவர்களான உத்தம ஆசார்யர்களை அடைந்து அவர்களுடைய அனுக்ரஹத்தினால் வேதாந்த வித்யையைக் கற்று அதிலிருந்து தமது சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டு வெகு ஸூக்ஷ்மமாயிருப்பதான ஆத்ம ஸ்வரூபத்தைக்கண்டால் ஸம்ஸாரபந்தம் விலகுமென்றும் அதற்குமேல் பரமாத்ம ஸ்வரூபத்தைக் கண்டால் அழியா உலகஞ்சென்று நித்யமாய்ப் பேரானந்தம் அனுபவித்துக்கொண்டிருக்கலாமென்றும் அறிந்து அதற்கு வேண்டிய முயற்சியைச் செய்ய முற்படுவார்கள்.

6. பிறவி வேண்டாதயோகிகளும் அனுஷ்டிக்க வேண்டும்

அதில் ஆத்மஸ்வரூபத்தைக் காண்பிப்பதற்காகச் செய்யவேண்டியது யோகாப்யாஸம். அதாவது மனஸ்ஸைக் கட்டுப்படுத்தி ஆத்மாவிலேயே நிலைக்கச் செய்து கொண்டிருப்பது. இதை ஜ்ஞானயோகமென்பார்கள். மனஸ்ஸைக் கட்டுப்படுத்துவது வெகு கஷ்டம். நாம் ஒன்றை நினைத்துக்கொண்டிருக்க விரும்பினால் அது தானாக ஒன்றை விட்டு ஒன்றைப்பற்றி எங்கெந்த விஷயத்தையோ நினைக்கும். ஆகை

யால்முதலிலேயேஜ்ஞானயோகத்தையனுஷ்டிப்பது ஸாத்யமன்று. அதனால் மனஸ்ஸிலுள்ள மலமெல்லாங்கழிந்துஜ்ஞானயோகத்தையனுஷ்டிப்பதற்குத் தக்க யோக்யதையைப் பெறுவதற்காக அவர்கள் சாஸ்திரங்கள் விதித்த கர்மாக்களில் ஏதோ ஒன்றை ப்ரதானமாகக்கொண்டு அதிலிருந்து எவ்விதமான பலத்தையுமடைய விரும்பாமல் 'நாம் அனுஷ்டிக்கும் கர்மாக்கள் எல்லாவற்றையும் பகவானே செய்கின்றான்' என்ற எண்ணத்துடன் அனுஷ்டித்துவருவார்கள். இது கர்மயோகமெனப்படும் இப்படிக் கர்மயோகத்தை அனுஷ்டித்து அதனால் காலக்ரமத்தில் மனஸ் நிர்மலமானபிறகு ஜ்ஞானயோகத்தைச் செய்து அதனாலாத்மஸாக்ஷாத்காரத்தைப் பெற்று அதன பிறகு பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரத்தைப் பெற முற்படுவார்கள். அதற்காக இவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய உபாயம் பக்தி யோகம் எனப்படுகின்றது. உறுதியோடிதை அனுஷ்டித்து வந்தால் முடிவில் பரமாத்மஸாக்ஷாத்காரத்தைப் பெற்றுப் பிறவிக் கடல் நீந்தி சாச்வதமாக எப்பொழுதும் பேரானநதத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

இவ்விதமாக ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டு இனி எக்காலத்திலும் எவ்விதத் துன்பத்தையும் அனுபவிக்காமல், இதற்கு மேல் பட்டது ஒன்றுமில்லை யென்னும்படியான பேரானந்தத்தில் மூழ்கியிருக்க வேண்டுமென்று கருதி மேற்கூறிய கர்மயோக ஜ்ஞானயோக, பக்தியோகங்களை அனுஷ்டிப்பவர்களும் கீழ்ச் சொன்ன அத்யயன, யஜன, தானங்களாகிற ஸ்வதர்மத்தை விடக்கூடாது. அனுஷ்டித்தே தீரவேண்டும். அனுஷ்டிக்காவிட்டால் அவர்களுடைய யோகம் ஒன்றும் பலிக்காது.

7. ப்ரபன்னர்களும் அனுஷ்டிக்க வேண்டும்

இக்காலத்தில் இந்த யோகங்களை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய சக்தி யாருக்குமில்லை. சக்தியில்லாதவர்களும் அனுஷ்டிக்கக்கூடிய மற்றோர் உபாயம் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சரணாகதி யென்றும் ப்ரபத்தி யென்றும் பெயர். இதைத் தானாகவோ ஆசார்யர் அல்லது மற்றொரு பெரியோர் மூலமாகவோ அனுஷ்டிக்கலாம். இது பதினைந்து அல்லது இருபது நிமிஷங்களில் செய்து முடிக்கக்கூடிய லகுவான உபாயம். இதற்குக் கர்ம ஒன்றும் அங்கமன்று. 'இதைச் செய்தால் தான் ப்ரபத்தி நிறைவேறும். இல்லவிட்டால் நிறைவேறாது' என்பதற்காக ஒரு கர்மாவை யும் செய்ய வேண்டியதில்லை. ஆயினும் இப்ப்ரபத்தியை அனுஷ்டித்து ப்ரபன்னரென்று பேர் பெற்றிருக்குமவர்கள் கீழ்ச் சொன்ன அத்யயன, யஜன, தானங்களை விடக்கூடாது. அனுஷ்டித்தேயாக வேண்டும். ஜீவித்திருக்குமளவும் இவற்றைச் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்கள் விதிக்கின்றமையாலும், சாஸ்திரங்கள் யாவும் ஸர்வேச்வரனுடைய கட்டளையாகையாலும் எனக்கு வேறு எந்தக் கதியுமில்லை, நீயே கதி. நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று ஸர்வேச்வரனைச் சரணமாகப் பற்றினவர்கள் அவனுடைய கட்டளைகளை மீறி நடப்பது தகாது. உண்மை அறிவு பெற்றுச் சரணாகதியை அனுஷ்டித்தவர்கள் அவனுடைய சட்டளையை மீறிநடக்க இயலாது. ஆகையால் இவர்களும் அவற்றையனுஷ்டித்தே ஆகவேண்டும்.

8. கடமைகள், கடன்கள்

ப்ராஹ்மணன் பிறக்கும்போதே மூன்று கடன்களோடு பிறக்கின்றான். அவற்றில் வேதாத்யயனம் செய்து ரிஷிகள் கடனையும் யஜ்ஞம் செய்து தேவர்கள் கடனையும் புத்திரனைப் பெற்று பித்ருக்களின் கடனையும் நிவ்ருத்தி செய்ய வேண்டுமெனப்பட்டிருக்கிறது. உலகத்தில் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் அது எப்படிப் பெருங்குற்றமாகின்றதோ அப்படியே ப்ராஹ்மணனாய்ப் பிறந்த ஒருவன் இவற்றைச் செய்யாவிட்டால் அது பெருங் குற்றமாகுமென்பது கருத்து. ஆத்மஜ்ஞானமில்லாதவன் 'இவ்விதக் குற்றத்திற்கு நாம் ஆளாகக் கூடா'தென்றெண்ணி வேதாத்யயனம் முதலியவற்றைச் செய்வான். ஆத்மஜ்ஞானமுள்ளவன் யோகங்களை அனுஷ்டிக்கப் புகுந்து தனக்சேற்பட்ட வர்ணாச்ரம தர்மங்

களைச் செய்யாவிட்டால் தான் அனுஷ்டிக்க விரும்பும் யோகம் ஒன்றும் நிறைவேறுதென்றெண்ணி அவற்றைச் செய்வான். ப்ரபன்னன் ஸர்வேச்வரன் கட்டளையை நாம் செய்தேயாக வேண்டுமென்று கருதிச் செய்வான். இவர்கள் எல்லோருமே ஸர்வேச்வரனிடத்திலிருந்த அன்பு கொண்டவர்களாயின் 'இவற்றைச் செய்தால் அவனுக்கு ஸந்தோஷம். ஆகையால் இவற்றை நாம் செய்ய வேண்டும்' என்று ப்ரீதியோடு செய்வார்கள். எவ்விதத்திலும் க்ருஹஸ்தர்கள் இவற்றை அவச்யம் செய்தே ஆகவேண்டுமென்பது மறக்கக்கூடாத வெகு ப்ரதானமான விஷயம்.

9. எல்லா ஸித்தாந்தங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டவை

வேதம் முதலிய சாஸ்திரங்களை நாமெல்லோரும் ப்ரமாணமாகக் கொண்டிருக்கிறோமாயினும் நமக்குள் பல ஸித்தாந்த பேதங்கள் இருக்கின்றன. அவை அத்வைதம், த்வைதம் விசிஷ்டாத்வைதம், பேதாபேதம், சுத்தாத்வைதம் என்ற இவை முதலியன. ப்ரஹ்மம் எத்தகையது? உலகம் எவ்விதமானது? ப்ரஹ்மத்திற்கும் உலகத்திற்குமுள்ள ஸம்பந்தம் எப்படிப்பட்டது? என்ற இவ்விஷயங்களில் அந்த ஸித்தாந்தங்கள் பரஸ்பரம் முற்றிலும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஆனல் கீழ்ச் சொன்ன ஸ்வதர்மங்களைத் தவறாமல் அனுஷ்டிக்க வேண்டுமென்பதில் எந்த ஸித்தாந்தமும் மாறுபட்ட அபிப்ராயங்கொள்ளவில்லை. ஸம்ஸாரபந்தம் கழிந்து முக்தியடையும் வரையில் அவற்றை விடக்கூடாது. அனுஷ்டித்தே வர வேண்டுமென்பது எல்லா ஸித்தாந்தங்களும் ஒரே கருத்தாகக் கொண்ட விஷயம். இவ்விதமே சைவம் வைஷ்ணவம் என்றிப்படி வெவ்வேறு மதங்கள் இருக்கின்றன. இவற்றிலும் வேதாத்யயனம், யஜனம், முதலியவற்றை முறைப்படி செய்து வரவேண்டுமென்கிற விஷயத்தில் அபிப்ராயபேதம் கிடையாது.

10. பயன் உலக நன்மை

இப்படி மேற்கூறிய தர்மங்களுக்கு நம் தேசத்தில் யாவராலும் ஒரே விதமாக முக்யத்வம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது எதற்காக என்பதை இனி நாம் கவனிக்கவேண்டும். ஜனங்களைப்படைத்த பகவான் அவர்களோடு கூட யஜ்ஞத்தையும் படைத்து 'இது உங்களுக்கு வேண்டியதை எல்லாம் கொடுக்கும். இதைக்கொண்டு ஸர்வக்ஷேமங்களையும் அடையுங்கள். எப்படி எனில் இதைச் செய்து நீங்கள் தேவர்களை வாழ்வியுங்கள். தேவர்கள் உங்களை வாழ்விப்பார்கள்' என்று கட்டளையிட்டாரெனப்பட்டிருக்கிறது பகவத்கீதையில். 'இந்த உலகம் கொடுப்பதைப் பெற்று தேவர்கள் வாழ்கின்றார்கள். அந்த உலகம் கொடுப்பதைப் பெற்று மனிதர்கள் வாழ்கின்றார்கள்' என்கிறது வேதம். மனிதர் உலகில் ஜீவிப்பதற்கு முதல் ப்ரதான காரணம் மழை. அது காலங்களில் பெய்ய வேண்டும். வேண்டிய அளவே பெய்ய வேண்டும். இது தேவர்களுடைய அனுக்ரஹத்தாலேயே நடைபெறும். ஆகையால் அவர்களை நாம் பூஜிக்க வேண்டும். அப்பூஜையே யஜனம் அல்லது யஜ்ஞம் எனப்படுவது.

மனிதர்களுக்குப் பல கஷ்டங்கள் உண்டாகின்றன. இவை தேவர்களால் வருமவை என்றும் மனிதரால் வருமவை யென்றும் இரு விதங்கள். அக்னி, ஜலம், வ்யாதி, துர்பிக்ஷம், அகால மரணம் என்றவிவை முதல் வகுப்பைச் சேர்ந்தவை. அதிகாரிகள், திருடர்கள், பிற நாட்டார், அரசனுக்கு வேண்டியவர்கள், அரசனுடைய லோபித்தனம் இவற்றால் வருமவை இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவை. அதிக மழை. மழை இல்லாமை, எலிகள், பூச்சிகள், கிளிகள் இவை தனியே ஈதிபாதைகளெனப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் உண்டாகாமல் தடுப்பதற்கான உபாயம் முறைப்படி யஜ்ஞானுஷ்டானம் நடைபெறுவதே. இப்படித் தீங்கு ஒன்று முண்டாகாமல் எல்லா க்ஷேமங்களையும் பெற்று ஜனங்கள் ஸுகமாக

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வித்3யாபி4: ஸ்வவிபக்ஷஸாத3நபடுபி4: ஸ்வாத்4யாயவஶ்யதாம் ஸித்3த்4யை ரநாஶநித்யதாம் ஶௌசஸ்வாத்4யாய ஸந்தோஷாதி3பி4: । ஶுத்3த4ஸூதஸ்ய ஶுத்3தே4ந ரத2ஸ்ய ரதி2நா த்3ருஷ்டாயுஷா ஸம்- ப்ரதி ப்ரத்யர்தி2கௌரஸிதேந வர ஶ்ரேஷ்ட2 ப்ரதிஷ்டா2ப்யதே ॥

(ஸ்வாமி தம் ஸ்வந்தவிஷயத்தையும் நினைப்பதாக்வும் கொள்ளலாம்.) பரமதபக்கத்தில் ஸாமர்த்யமுடைய இவர் கற்ற வித்யைகளெல்லாம் தக்க அதிகாரிகளிடம் போய்க்கொள்ளட்டும். சாந்தி, தாந்தி, ஸ்வாத்யாயஸந்தோஷம் முதலிய பக்தியோகஸமாதிக்கு ஸஹகாரிகளாக வளர்க்கப்பட்ட அந்தரங்கரும் அநுமதி கொடுக்கவேணும். 'ஶௌசஸந்தோஷதப:ஸ்வாத்4யாயேஶ்வரப்ரணிதா4நாநி நியமா:' என்ற யோக ஸூத்ரத்தில் ஸ்வாத்யாயமும் ஸந்தோஷமும் நியமங்களாகப் படிக்கப்பட்டன. 'தப:ஸ்வாத்4யாயேஶ்வரப்ரணிதா4நாநி க்ரியாயோக3:' என்று இரண்டாமத்யாயாரம்ப முதல் ஸூத்ரம். அதற்கடுத்த ஸூத்ரத்தில் அவை 'ஸமாதி4பா4வநார்தா2:' என்று கூறப்பட்டன. அங்கே வாசஸ்பதிமிச்ரர் வ்யாஸ பாஷ்யடீகையில் 'ஸ்வாத்4யாயஶௌசஸந்தோஷதபாம்ஸி நியதாத்மவாந் । குர்வீத ப்3ரஹ்மணி ததா2 பரஸ்மிந் ப்ரவணம் மந:' என்று விஷ்ணுபுராணமுடிவில் காண்டிக்யகேசித்வஜ ஸம்வாதச்லோகத்தை உதாஹரித்தார். அங்கும் ஸ்வாத்யாயஸந்தோஷங்களையும் சேர்த்து படித்துளது. இதையெல்லாம் ஸ்வாமி ஸூசிக்கிறார். ஸ்வாத்யாயம், ப்ரணவம், உபநிஷத்து முதலியதை ஆவ்ருத்திசெய்துகொண்டிருந்தால் ஸித்தி ஏற்படுகிறது. 'ஸித்3த்4யை' என்றதால் இந்த ஸாதநங்களெல்லாம் ஸித்தியை ஸம்பாதித்துவிடுகையால் ஸித்திக்குப் பின்பு இவை வேண்டியதில்லை என்று ஸூசநம். 'நஹ்நாம்ஸி வ்ருஜிநா தா4ரயந்தி ஶயாவிநம் ஶயயா வர்த4மாநம் । ஹ்நாம்ஸி தம் ப்ரஜஹாத்யேககாலே நீ(ட3)ம் ஶகுநா இவ ஜாதபக்ஷா:' என்ற ஸநத்ஸுஜாதருபதேசத்தை இங்கே நினைக்கவேணும். வேதவேதாந்தாத்யயநங்கள் செய்திருந்தாலும் மாயாவியாகவே இருந்துவந்தால் அவனை அந்திமகாலத்தில் கூண்டிலடைக்கப்பட்டு வருந்திக்கொண்டிருந்த பக்ஷிகள் கூண்டு உடைந்தால் பறந்து ஓடிப்போய்விடுவதுபோல் இவன் மனக்கட்டை விட்டு சிறை தொலைந்ததே என்று ஸந்தோஷத்துடன் அவை இவனை விட்டுவிட்டுப் பறந்துபோய்விடும். அப்படிக்கில்லாமல் இவரோடுகூடத் துணையாய் நீண்டகாலம் வஸித்து பகவத்த்யானத்தில் இவருக்கு ஸஹகாரம் செய்துவிட்டு இவரைக்கரையேறச்செய்து பதிக்ருஹத்திற்கு அநுமதி கொடுத்தனுப்புகின்றன. உபநிஷத்துக்களான ப்ரியஸகிகள் இப்படிச்சொல்வது. திருவாய்மொழி 10ம் பத்தில் ஆழ்வார், நாதன் வீட்டிற்குச் செல்லுமுன் திருமோகூர், அநந்தசயநம், திருவாட்டாறு, திருமாலிருஞ்சோலை, திருப்பேரறை முதலிய பிறந்தவீடுகளிடமும் பந்துக்களிடமும் விடை பெற்றுக்கொண்டார்போலும்' என்று ஈடு. புறமதங்கள் விபக்ஷங்கள், சமதம ஸ்வாத்யாயாதிகள் ஸபக்ஷங்கள் என்று த்வநி. ஶுத்3த4ஸூதஸ்ய ஶுத்3தே4ந ரத2ஸ்ய ரதி2நா த்3ருஷ்டாயுஷா— விவேகரென்பவர் வ்யவஸாயாத்மகமான புத்தி. கீதை உபதேசாரம்பத்தில் 2-வது அத்யாயத்தில் 'வ்யவஸாயாத்மிகா பு3த்3தி4:' என்று குறிக்கப்பட்டது. 'பு3த்3தி4ம் து ஸாரதி2ம் வித்3தி4' என்ற கடவல்லியை நினைக்கவேணும். அங்கு சரீரம் ரதம். இங்கு மனது ரதம். ஸ்தூலசரீரம் கூடப்போகாது.

இந்த மனமெனும் ரதத்திற்கு புத்தி எனும் விவேகர் ஸாரதி. இங்கே முன் பரிசயமே இல்லாத விண்மார்க்கத்தில் செல்லவேணும். அந்தவழியை அடிக்கடி சாஸ்த்ரத்ருஷ்டமான மார்க்கத்தால் சிந்தனம் செய்வதால் புத்தி எனும் ஸாரதிக்கு மார்க்கபரிசயம் ஏற்பட்டிருக்கிறது. சாஸ்த்ரத்ருஷ்டமானவழியில் இவருக்கு தர்சனம்போன்ற தெளிந்த அறிவு ஏற்பட்டிருக்கிறது. 'ந ச புநராவர்த்ததே – திரும்புவதில்லை என்னும் மார்க்கத்தால், ஸம்ப்ரதி – இப்பொழுது, பரம் ப்ரஹ்ம – பரப்ரஹ்மத்தைக்குறித்து, கார்யப்ரஹ்மமான ஹிரண்யகர்ப்பர் வீட்டிற்கல்ல, பரப்ரஹ்மவீட்டிற்கேதான் என்று கருத்து. ஜைமினியும் இந்த மார்க்கம் பரப்ரஹ்மகமான மார்க்கம் என்று ஒப்பினரென்பதற்கும் ஸூசனம்.

(ஆகாயத்தில் துந்துபி முழக்கம் கேட்கிறது. எல்லோரும் கேட்டு என்ன ஸந்தோஷ மங்களோதயமோ என்று ஆவலை நடிக்கிறார்கள்.)

விஷ்ணுபக்தி:—

நிவ்ருத்ததீக்ஷ்ணோ நிப்ருதப்ரசாந்த
வாக்புத்தீந்த்ரிய: பரப்ரணிதிமஹிம்நைவ
த்ருடிதகர்மபந்த: க்ருதீ । விமுக்தி
பதமத்புதம் த்ருதமுபைதி வித்வா
நிதி த்ரிவர்க்கரஸக்ரஸத்ரிதசதுந்துபி
ஸ்தாட்யதே ॥

அத்புதரஸம் வெள்ளமிடுகிறது. புருஷனுக்கும் அத்புதரஸாநுபவம். வாக்குக்கும் மனதுக்குமெட்டாத அத்புத இன்பாநுபவம். பரமபதத்திலுள்ளவருக்கும் இவன் வீடு வரப்போகிறானே என்று அத்புதரஸத்தில் தூரியம் முழக்குகிறார்கள். 'ஆச்சர்யோ வக்தா குசலோऽஸ்ய லப்தா ஆச்சர்யோ ஜ்ஞாதா குசலாநுசிஷ்ட:' என்று கடவல்லியில் தர்மராஜர், மோக்ஷப்ரஹ்மரஸமடைபவனை 'ஆச்சர்யம், ஆச்சர்யத்திற்குமேலாச்சர்யம்' என்று வருணித்தார். பகவானும் கீதோபதேசாரம்பத்தில் 'ஆச்சர்யவத் பச்யதி கச்சிதேநம்' என்கிற ச்லோகத்தால் இவனை ஆச்சர்யம் ஆச்சர்யம் என்று திரும்பவும் திரும்பவும் புகழ்ந்தார். 'ப்ரஹ்மவித் வருகிறார் வருகிறார்' என்று மகிழ்ந்து பேசிக்கொண்டு தூரியம் முழக்குகிறார்கள். நிவ்ருத்ததீக்ஷ்ண: – 'யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம் । ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' என்கிற ச்ருதி நினைவிக்கப்படுகிறது. 'நிரஞ்ஜந:' என்ற ச்ருதியின் ஸூசனம். மனனகமலமற்று. நிப்ருதப்ரசாந்த வாக்புத்தீந்த்ரிய: – புத்தி, புத்தீந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள், மனமெனுமிந்த்ரியம் எல்லாமொடுங்கி சலிக்காமல் நிர்வ்யாபாரமாய் நின்று, 'யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ । புத்திச்ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிம்' என்று கடவல்லி கூறியதே ஆகும். பரப்ரணிதிமஹிம்நைவ – பரமாத்மத்யானத்தின் வைபவத்தால், த்ருடிதகர்மபந்த: – வினைவிலங்குகள் பட்டென்று தெரித்து விலகி, வித்வாந் – ப்ரஹ்மவித்தாகிய இவர், விமுக்திபதம் – மோக்ஷமார்க்கத்தை, த்ருதம் – விரைவாக, அத்புதம் – அத்புதமாக, உபைதி – நெருங்குகிறார். த்ரிவர்க்கரஸக்ரஸ: – தர்மார்த்தகாமங்களாகிய முப்பால் ரஸங்களை முழுங்கிவிடும், த்ரிதசதுந்துபி: – தேவதுந்துபி, தாட்யதே – முழங்குகிறது. துந்துபிமுழக்கச் சப்தத்தில் மற்ற சப்தங்கள் முழுகி அநுபவத்திற்கு வரமாட்டா.

புருஷன்:— இதோ குழந்தை விவேகன், இந்த ஸந்தோஷ அவஸரத்தில் ஸமயமறிந்து விஷ்ணுபக்தியோடுகூட வருகிறான்.

(எல்லோரும் வந்து நமஸ்கரிக்கிறார்கள்)

புருஷன்:— எல்லோரும் தீர்க்காயுஸாய் வாழவேணும். (குழந்தை விவேகனை மார்போடணைத்து) மஹாவீரனே! (இது ராமன் நினைவைக்காட்டும்) நெடுநாள் மூர்ச்சைத் தூக்

கத்திலிருந்து என்னை எழுப்பிவிட்டாய். விரோதிகளால் குலஜ்ஞாதிகள் தொலைந்தனர்.

விவேகராஜா— (தன் மனத்திற்குள்) குலக்ஷயம் செய்த பாதகி என்று என்னை சிலர் தூஷிக்கிறார்கள். (கௌரவர் 100 பேர். கெட்ட வழிகளுக்கு நடத்தும் நாடிகள் 100.)

புருஷன்:— விவேகனும் ஸுமதியும் பகவானிடம்காதல்மயமான விஷ்ணுபக்தி ஆகியநீங்கள் மூவரும் என்னை ஒருக்காலும் பின்பும் பரமபதத்திலும் விடக்கூடாது.

விஷ்ணுபக்தி:— சுப நிமித்தங்களாலின்றே ஸ்வாமிக்கு ஸித்தி கிடைக்குமென்று தெரிகிறது.

திவ்யஸ்ஸம்ப்ரதி ஸாந்த்ரடிமிடிமி
ஸ்வானைஸ்ஸாஹா: ஶ்ரூயதே தேவா
நாமபி ஹாவுஹாவுஹஹோ விக்ஷோ
பயத்யம்பரம் | கல்யாணக்ஷிதிஸம்ஸ்க்ருதி:
க்ருதமுகைர் ப்ரஹ்மாலங்க்ருதை: ஸ்ரீபதே
ராஜாஜ்ஞாதாரிபிராதிவாஹிககணைராதி
ஶ்யதே வர்த்ம ந:

'சூழ் விசும்பு' நெஞ்சிலோடுகிறது. எம்பெருமானோடே ஸம்ச்லிஷ்டமான ஆழ்வார் தாம் திருநாடேற வெழுந்தருளும்படியையும் தாமெழுந்தருளும்போது ஸர்வலோகங்களும் தம்மைக் கொண்டாடும்படியையும் திருவுள்ளத்தாலே ப்ரத்யக்ஷீகரித்து அந்யாபதேசத்தாலே பேசுகிறார்' என்ற ஆராயிரப்படி அவதாரிகையும் நினைக்கப்படுகிறது. 'இத்தனையும் இப்போதே தாம் பெற்றதாகவே தமக்குத் தோற்றுகையாலே சொன்னதென்று கருத்து. 'அந்யாபதேசத்தாலே' என்றது தம்மை விசேஷித்து நிர்தேசியாதே நாரணன் தாமரை இத்யாதியாகச் சொன்ன ஸ்ரீ வைஷ்ணவஸாமாந்ய நிர்தேசத்தாலே யென்றபடி என்று ஸாக்ஷாத் ஸ்வாமி உரை. ஸம்ப்ரதி— இப்பொழுது, 'இப்போதே' என்று காலத்தை ஸூசிப்பது. 'டிமிடிமி'— விசும்பு முழுவதும், (சூழ்விசும்பு) தேவாநாம் ஸாந்த்ரஸாஹி:— விண்ணவர் தூரியம், அதிர் குரல் முரசங்கள் ஸ்வானை:— முழக்கங்களால், ஸாஹா: ஶ்ரூயதே— காதில் விழுந்துகொண்டே இருக்கிறது. தேவாநாமபி ஹாவுஹாவுஹஹோ விக்ஷோபயத்யம்பரம்— 'அபி' என்பது மிக்க ரஸம். இவனுடைய 'ஹாவுஹாவு' என்ற ஸாமகானம்தவிர தேவர்களுடைய அவ்வித ஸாமகானமும் ஆகாயத்தைக் கலக்குகிறது. அதெப்படி? 'ஸஹஸ்ராஹ்ந்யஸ்ய ப்ரஹ்மணோ' என்ற ப்ரச்னோபநிஷத்தை நினைக்கிறார். ஸாமகாநகோஷங்களைப் பாடிக்கொண்டு மேலே நயநம் செய்வர். 'தேவாநாம்' என்பது ஆண் பெண் எல்லோரையும் குறிக்கும். மடந்தையர் வாழ்த்தலும், கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்கள்' அவர்களும் ஸாமஸ்வரங்களோடு பாடுபவரே. 'கல்யாணக்ஷிதிஸம்ஸ்க்ருதி: க்ருதமுகை:— ப்ரதிஸம்ஸ்க்ருதம்— அலங்காரம் செய்வது. 'க்ருதமுகர்' என்பதற்கு கெட்டிக்காரர் என்பது பொருள். ப்ரஹ்மாலங்காரங்கள் செய்ய ஆரம்பிப்பவர்கள். ஸ்ரீபதே ராஜாஜ்ஞாதாரிபி:— சேஷிதிவ்ய தம்பதிகளுடைய ஆஜ்ஞையை சிரஸ்ஸில் தரிப்பவர் ப்ரஹ்மாலங்காரங்களால் அலங்கரிப்பவர் என்று கௌஷீதிகீ. வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே' மாதவன்— ஸ்ரீபதி. ஆதிவாஹிககணை: ஆதிஶ்யதே வர்த்ம ந:— வழியிது வைகுந்தர்க்கென்று வந்தெதிரே.

புருஷன்:—

ஶுபஸ்தாநி நிமித்தாநி ஶோபயந்தி ஸ்வரா-
ஜவ: | பூதம் பூதவிலாஸிந:
பவிஷ்யதி வரம் வத: ||

பக்தியோகம் புரிகையில் ஜ்யோதிஷ க்ரஹநிலைகள், சகுனநிமித்தங்கள் ஸ்வப்நத்தில் பகவானால் காண்பிக்கப்படுவது முதலியவற்றை ப்ரதீக்ஷிப்பதாயிருந்தது. 'ஶுபேந யோகிநா நிமித்தஸ்வாமி டிம்பராவாநக

வ்ருஷ்ணுஃயாமவெதி வ்ஜிதம்' என்று ப்ரபாவிலாஸ உரை. ச்வேதாச்வதர உபநிஷத்தின் 2-ம் அத்யாயத்தில் யோகக்ரமங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளதை ஸூத்ரகாரர் 4-ம் அத்யாயம் முதல்பாதத்தில் எடுத்திருக்கிறார். 'ஸெநாநாகூலெ' என்ற ஸ்தாநவிஷயமந்த்ரம் உதாஹரிக்கப்பட்டது. 'நீஹாரயூமா கூநிலாநலாநாம் வடெ்யாதவிஃ்யுஸ்ஃடி கஃஸிநாம் | ஊதாநி ரூவாணி வுரஸ ரூாணி ஊ வஹணஹிவ்யக்திகராணி யொமெ ||' என்று தொடங்கி சில ச்லோகங்களால் பூர்ண யோகஸித்திக்கு முன்பு சில அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன. யோகத்தின் பூர்ணஸித்தி விஷயத்திலும் அத்யந்த நைர்பர்யத்தை அவலம்பித்து பகவத்ஸங்கல்பத்தால் நேருவதையெல்லாம் பகவத் க்ருபா ப்ரவாஹமென்றே பரம ப்ரீதியோடு உபாஸித்துக் கொண்டே பரமபத ப்ரயாணம் செய்வேன்.

என்ன பாக்யம், என்ன பாக்யம், ரஸம் (ஜலம்) ருதிரம், (ரக்தம்) பிசிதம், (மாம்ஸம்) மேத:, (வஸை) கீகஸம், (இலும்பு) மஜ்ஜா, (இலும்பின் உள் ஸாரம்) சுக்லம், (ரேதஸ்) இந்த 7- தாதுமயமான கஷெவர காராகாராக- சரீரமென்னும் சிறைச்சாலையிலிருந்து ஸவாகூடீரகொடிராக- வேடுவன் குடிசையெனும் கூட்டுப் பொந்திலிருந்து, நிஷ்ரா ஹ:- வெளிக்கிளம்பி, ஸார்வபௌமமான தகப்பனர் அரண்மனைக்கு எதிப்போக த்வரிக்கும் ராஜகுமாரன் போல, ஆங்காங்கு தகப்பனர் நியமித்திருக்கும் அதிகாரி தேவர்களால் ப்ரக்திப் பாலவனப் பாழை தாண்டி ஜ்யோதிர்மயமான பரமபதமேறப்போகிறேன். அங்கே

ஸவ்யம் வாஃம் ஹ்ஸாயு ஸ்ரீதஃஸித
ஹாரம் ஃக்ஷிணம் கூஞ்யிகவா ஜாநு
ந்யாபாய ஸவ்யேதரஜிதரஹஜம் நாம
ஹொமெ நியாய | வஶாஜாஹாஉயெநவ
வ்ருதிஃடிஶஸெ யாரயநு ஶம்வவகெ

ஷெவீ ஹஷாநிஜஷா ஜநயதி
ஜமதாம் ஶஃ வெக்ஹூநாயஃ ||

தத்க்ரது ந்யாயப்படி ப்ராப்தியிலுள்ளபடியே பக்தியோகத்திலும் த்யானம் செய்து வந்திருக்கிறது. 'ஸவ்யம் வாஃம் ஹ்ஸாய- நீட்டிய இடதுகாலுடன், ஸ்ரீதஃஸிதஹாரம் ஆச்ரிதர் பாபஹரமான, (பாதம்) இது முன்னும் பின்னும் இரண்டு பாதங்களுக்கும் ஒட்டுவது- ஃக்ஷிணம்கூஞ்யிகவா—மடக்கிய வலது காலுடனும், ஜாநுந்யாயாய ஸவ்யேதரம்— வலது திருக்கையை ஜாநுவில் வைத்து; ஸர்வ ஜனத்திற்கும், ஶஃ- ஸுகத்தை ஜநயதி— அளிக்கிறார். பார்யாபுத்ராதிகளால் ஸுகம் கிடைப்பதெல்லாம் அவராலேயே. அவரிச்சையில்லாமல் பதிஜாயாபுத்ரவித்தாதி ஸுகம் ஒன்றும் கிடைக்கவே கிடைக்காது.

(கொஞ்சம் நடந்து கை கூப்பி)

பரமபதத்திலும் இங்குமுள்ள திவ்யமான மஹிமாதிசயத்தையுடைய ஆசார்யேந்த்ரர்களின் திருவடி பணிந்து ஒன்று ப்ரார்த்திக்கிறேன். உங்கள் ப்ரபாவத்தால் ஆதிக்கோன் வீட்டிற்குச் சென்று அடையவிருக்கிறேன். அங்கே சேரும்படிக்கு இந்த தாஸனை அநுக்ரஹத்தோடு கடாக்ஷித்தருளவேணும்.

மேலும்—

ஹஃெத ஃஹ்ஃவொஃநயஶரொநாயாய
நாயாஃயஃ துயஹவ்ருதிநநீயவிபொ
ஃஹா: ஹ்ஃதொஹ | ஶ்ருஷா தவ்யஶரண
ஃம்வகிஃயாஃவ்யாவஹாவ்யாவகா: ஹ்ஸ்ரா
விஹவ விஹ்ஹஃம்ஹவஃவீ வெஃஃஶிகா
ஷெஶிகா: ||

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

(கரு) சித்திரகூடமலையில் இருந்தபோது ஒரு ஸமயம் ஸ்ரீராமபத்ரன் ஸீதைப் பிராட்டியின் மடிமேல் தன் முடியை வைத்துக் கடுந்துயிலிலாழ்ந்திருந்தார். அப்போது இந்திரன் மகனான ஜயந்தன் பிராட்டியிடம் தகாத எண்ணம் கொண்டு காக்கையுருவத்துடன் அங்கு சேர்ந்து ஜகன்மாதாவான ஸீதையின் கொங்கையைத்தன் கூறிய நகங்களால் கிழித்தான். இதனால் தூக்கம் கலைந்த ஸ்ரீராமபத்ரன் மிகவும் கோபமுற்றார். உடனே படுக்கையிலுள்ள ஓர் தருப்பைப் புல்லை எடுத்து அக்காக்கையைக் கொல்லுவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரமாகப் ப்ரயோகம் செய்துவிட்டார். தன்னைத் தொடர்ந்து வேகமாக ஓடிவரும் அந்த அஸ்த்ரத்தினால் விரட்டப்பட்ட காகாஸுரனும் இந்திரன் முதல் ப்ரஹ்மாவரையுள்ள எல்லாத் தேவர்களையும் மற்றுமுள்ள முனிவர்களையும் நெருங்கிச் சரணமடைந்து தன்னைக்காக்கும்படி வேண்டினான். அவர்கள் யாவரும் ஸ்ரீராமபத்ரனின் ப்ரஹ்மாஸ்த்ரப்ரபாவத்தையும் இவன் செய்த மஹாபசாரத்தையும் அறிந்து மிகவும் பயந்தவர்களாய் இவனைக்காக்கமாட்டாதவர்களாயினர். இப்படி பூவுலகம் திரிந்தும் தன்னைக்காக்க ஒருவரும் கிடைக்காததையறிந்த காகாஸுரன் ராமபத்ரனும் ஸீதாதேவியும் எழுந்தருளியிருந்த இடத்துக்கே திரும்பி வந்து (ப்ரளயகாலத்து அக்னிபோல் ஜ்வலிக்கும் ப்ரஹ்மாஸ்திரத்தினிடமிருந்து தன்னைக் காக்கவேண்டுமென்று) கூறி அத்திவ்விய தம்பதிகளின் முன்னால் விழுந்துவிட்டான். இப்படி விழுந்து மூர்ச்சித்துப்போன காக்கையைக் கண்டதும் ஜகன்மாதா மிக்க இரக்கம் கொண்டு இவனைக்காக்கும்படி ஸ்ரீராமபத்ரனைக் கேட்டுக்கொண்டாள். மேலும் தாறுமாறாக விழுந்த காகாஸுரனின் சிரத்தைத் தன்கையால் எடுத்து ஸ்ரீராமபத்ரனின் திருவடிகளில் படும்படி செய்து அவன் சரணாகதியைப் பூர்த்தி செய்து வைத்தாள். கருணைக்கடலான ஸ்ரீராமபத்ரனும் காகாஸுரன் செய்த சரணாகதியினால் ப்ரஸந்நமனமடைந்து தன் கையினால் அந்தக் காகத்தைத்தடவி எழுப்பி மூர்ச்சை தெளியச் செய்தார். பிறகு தன் அஸ்த்ரம் வீணாகாத நிலையைக் கருதி அக்காகத்தின் ஓர் கண்ணை அஸ்த்ரத்தினாலழித்திட்டு அக்காகத்தைக் காப்பாற்றியருளினார். இப்படி திவ்யதம்பதிகளால் காப்பாற்றப்பட்ட காகாஸுரன் தன்னைக் கருணையுடன் ரக்ஷித்த ஸீதையையும் ஸ்ரீராமபத்ரனையும் வணங்கி பலவாறு துதி செய்துத் தன்னிருப்பிடமான ஸ்வர்க்கலோகம் சேர்ந்தான். இங்கு மஹாபராதியான காகாஸுரனைத் தொடர்ந்து செல்லும் ப்ரஹ்மாஸ்த்திரத்தைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் என்னே ஸ்ரீராமபத்ரனின் அஸ்திரமஹிமை. இக்காக்கையை ரக்ஷிக்க நாம் முற்பட்டால் நம்மையும் இவ்வஸ்த்ரம் உபத்ரவிக்கிறது. அம்முயற்சியை நாம் கைவிட்டால் நம்மை விடுத்து இக்காக்கையை மாத்திரம் வருத்துகின்றது என்று கூறி அஸ்த்ரப்ரபாவத்தைக் கொண்டாடினர். ஸ்ரீராமபத்ரனிடம் அபராதப்பட்டவனைக் காக்க ஒருவராலும் முடியாது என்பதால் அவனே ஸர்வேச்வரன் என்பது உறுதிப்பட்டது. இவ்வர்த்தம் „ப்ரஹ்மாஸ்வயம்பூஸ்சதுராநநோ வா ருத்ரஸ்த்ரிநேத்ரஸ்த்ரிபுராந்தகோ வா ! இந்த்ரோமஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா த்ராதும் நசக்தா யுதி ராமவத்யம்!! என்ற ஸுந்தரகாண்ட ச்லோகத்தினால் கூறப்பட்டிருக்கிறது. ஸ்வயம்பூ என்றும் நான்முகன் என்றும் பெருமை கொண்ட பிரம்மதேவனும் முக்கண்ணன் என்றும் திரிபுரமெரித்தவன் என்றும் பெருமை படைத்த ருத்ரதேவனும் மஹேந்த்ரன் என்றும் தேவாதிபதி என்றும் கீர்த்தியுடைய

இந்திரனும் ஸ்ரீராமபத்ரனின் கோபத்திற்கு இலக்கானவனைக்காக்க சக்தியற்றவர்கள் என்பது இதன் பொருள். இந்த காகாஸுர வ்ருத்தாந்தம் அநுமாரிடம் ஸீதை கூறியதாக வால்மீகி ராமாயண ஸுந்தரகாண்டத்தில் கூறப்பட்டிருந்தாலும் பாத்ம புராணத்தில் இவ்விடத்திலேயே கூறப்படுவதாலும் சித்ரகூடகிரி வாஸத்தின்போது நிகழ்ந்ததாலும் நம் ஸ்வாமியினால் அயோத்யாகாண்ட கதா ஸங்கிரஹத்திலேயே கூறப்பட்டது. ஜயந்தனே காக்கையுருக்கொண்டு வந்தான் என்று சிலரும் காக்கையுருக்கொண்ட வேறு மகனும் இந்திரனுக்கு உண்டு என்று சிலரும் கூறுவர். சிற்றின்பமிசையாத வைராக்யசாலிகள் ஸ்தநத்தை போகத்துக்குரிய பொருளாகக் கருதமாட்டார்கள் என்பதைக் காட்ட இங்கு ஸ்தநத்தை நம் ஸ்வாமி 'பிசித' என்ற சப்தத்தினால் குறிக்கிறார். இவ்வர்த்தம் ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில் 'பிசிதமிதி பாவயந்த:' என்ற ச்லோகலேசத்தில் நம் ஸ்வாமியினால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது. மங்கையரின் கொங்கைகளை மஹான்கள் மாம்ஸ பிண்டமாகவே கருதுவர் என்பது இதன் பொருள்.

द्रुहिणहरवलमथनदुरालक्ष्यशरलक्ष्य!

த்ருஹிணஹரவலமதநதுராலக்ஷ்யசரலக்ஷ்ய!

தேவர்களும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் மற்றுமுள்ள கந்தர்வர்களும் வித்யாதரர்களும் நாகர்களும் யக்ஷர்களும் மூவுலகத்துக்கும் நாயகனான ஸ்ரீராமபத்திரனுடைய போர்களத்தில் நிற்கவும் சக்தியற்றவர்கள் என்ற பொருள் கொண்ட 'தேவாஸ்சதைத்யாஸ்ச நிசாசரேந்த்ரகந்தர்வ வித்யாதர நாகயக்ஷா:' ராமஸ்யலோகத்ரயநாயகஸ்ய ஸ்தாதும் நசக்தாஸ்ஸமரேஷுஸர்வே' என்ற சுலோகத்தினால் ஸாமாந்யதேவர்கள் ஸ்ரீராமபத்ரனுக்குப் பயந்தவர்கள் என்று ஏற்படினும் தேவர்களுக்குத் தலைவனான இந்திரனும் அவனுக்கும் மேம்பட்ட சிவனும் பிரமதேவனும் ஸ்ரீராமபத்ரனின் அஸ்த்ரத்தை எதிர்க்க சக்தி பெற்றவர்களாகக்கூடுமோ என்கிற சங்கையை இந்த சூர்ணிகையினால் நம் ஸ்வாமி பரிஹரிக்கிறார்.

(ப உரை) த்ருஹிண– விரோதிகளை ஒழிக்கவல்ல பிரஹ்மதேவனும், ஹர– லோகஹாரம் செய்யும் சிவனும், வலமதந- வலாஸுரனையழித்த பெருமை கொண்ட இந்திரனும், துராலக்ஷ்ய–கண்ணெடுத்துக் காணவும் முடியாத, சரலக்ஷ்ய–தன் பாணத்தின் இலக்கையுடைய ஸ்ரீராமபத்ர!

தேவச்ரேஷ்டர்கள் என்று பேசப்படும் பிரம்மா, சிவன், இந்திரன் ஆகிய இம்மூவரும் ஸ்ரீராமபத்ரனின் பாணத்திற்கு இலக்காகியவனைக் காணவும் முடியாதவர்கள் எனில் காக்கமுடியாதவர்கள் என்பது கைமுதிகந்யாயத்தினால் பெறப்படுகிறது. மதுகைடபர்கள் வேதத்தையபஹரித்துச் சென்றபோது மிகவும் புலம்பிக்கொண்டு பகவானையே சரணமடைந்தான் பிரஹ்மதேவன் எனில் தன்னைக்காக்கமாட்டாதவன் பகவானின் கோபத்திற்கிலக்கானவனை எப்படிக் காப்பான். நான் தொட்டவுடன் யாருடைய தலையும் வெடித்துச் சிதறவேண்டுமென்று தன்னிடமே வரம் பெற்ற வ்ருகாஸுரன் அதைப் பரீக்ஷிக்க வேண்டித் தன் தலைமேல் கையை வைக்க ஓடிவர தன்னைத் தானே ரக்ஷிக்கமுடியாமல் திண்டாடிய சிவன் பகவானைச் சரணமடைந்து ரக்ஷணம் பெற்றானெனில் அவனும் பகவத்

விரோதிடைக் காக்கமுடியாதென்பது தெளிவு, இப்படி ருத்ரனே காக்கமாட்டாதவன் எனில், அவனுக்குக் கீழ்ப்பட்ட இந்திரன் மிகவும் சக்தியற்றவனென்பது கைமுதிகந்யாய ஸித்தம். இம்மூவராலும் காக்க முடியாத விரோதியையுடையவன் பகவான் என்பதை முன் சூர்ணிகையின் கருத்தை விளக்கும்போது 'ப்ரஹ்மா ஸ்வயம்பூ: சதுராநநோ வா' என்கிற சுலோகத்தைக்கொண்டு கூறியுள்ளோம். இப்படி மஹாவீரவைபவத்தில் அயோத்யா காண்டஸங்க்ரஹம் முற்றுப்பெற்றது.

दण्डकातपोवनजङ्गमपारिजात! தண்டகாதபோவனஜங்கமபாரிஜாத!

(ப. உரை) தண்டகா—தண்டகை என்ற பெயருள்ள தபோவந—தவம் செய்வதற்குத் தகுந்த காட்டில் அதாவது முனிவர்கள் தவம் செய்கின்ற காட்டில் ஜங்கம-ஸஞ்சரிக்கின்ற, பாரிஜாத— பாரிஜாதமரம் போன்ற ஸ்ரீராமபத்ர!

(கரு) தேவலோகத்திலுள்ள ஐந்து மரங்களுள் பாரிஜாதமென்னும் மரமும் தன்னையடைந்து ப்ரார்த்திப்பவர்களின் மனோரதத்தைப் பூர்த்திசெய்யும். அதுபோல தண்டகாவனம் சென்ற ஸ்ரீராமபத்ரனும் அங்கு தவம் புரியும் முனிவர்களின் ஆச்ரமங்களுக்கு நேரில் சென்று அவர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்தான். தேவலோக பாரிஜாதம் தன்னிடம் வருகின்றவர்களின் கோரிக்கையைமாத்திரம் நிறைவேற்றும். ஸ்ரீராமபத்ரனே அவர்களிருப்பிடம் தானே சென்று இஷ்டபூர்த்தியைச் செய்தான். ஆகையால் பாரிஜாதத்தைக்காட்டிலும் உயரிய சீர்மையன் ஸ்ரீராமபத்ரன் என்பதைக் காட்டுவதற்காக இங்கு 'ஜங்கமபாரிஜாத' என்று சொல்லப்பட்டது. நடந்து செல்லும் பாரிஜாதம் உலகில் கிடையாதாகையால் இங்கு 'இப்பொருளுவமையணி' (அபூதோபமாலங்காரம்) கவனிக்கத் தக்கது. தண்டகன் என்ற ஓர் அரசனின் நாடுமுழுவதும் சுக்ரனின் சாபவிசேஷத்தினால் காடாக மாறியதுபற்றி தண்டகாவனம் என்ற பெயர் ஏற்பட்டது. இங்கு அறியவேண்டிய ஸ்ரீராமாயணகதை வருமாறு:— பாதுகைகளை யளித்து பரதனை யனுப்பிய ஸ்ரீராமபத்ரன் சித்ரகூடமலையில் சிலகாலம் தங்கியிருந்தான். அப்போது ஜநஸ்தானம் என்றவிடத்திலுள்ள கரன் முதலிய ராக்ஷஸர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்ட முனிவர்கள் ஸ்ரீராமபத்ரனிடம் சென்று 'சித்ரகூடமலைப்புறத்தில் கொடிய ராக்ஷஸர்கள் ஸஞ்சரிப்பதால் இனிமேல் உமக்கு இவ்விடம் வஸிக்கத்தகுந்ததன்று' என்று விண்ணப்பம் செய்தனர். உடனே ஸ்ரீராமபத்ரனும் ஸீதையுடனும் லக்ஷ்மணனோடும் புறப்பட்டு அத்ரி என்னும் மஹர்ஷியின் ஆச்ரமம் சென்று அம்முனிவரை வணங்கினான். அம்மஹர்ஷியும், அவர் தர்மபத்நி அநஸூயாதேவியும் எல்லையில்லாத புத்ரவாஞ்சையுடன் ஸ்ரீராமபத்ரனைக்கொண்டாடினார்கள். பதினாயிரம் வருஷங்கள் கடும் தவம் புரிந்தவள் என்றும், தானிருந்த காட்டில் பத்து வருஷங்கள் மழையே பெய்யாதபோது தன் தபோமஹிமையினால் கங்கையை வரவழைத்தும், பழங்களையும், கிழங்குகளையும் உண்டுபண்ணியும் காட்டிலுள்ளவர்களின் கஷ்டத்தைப் போக்கியவளென்றும், தேவகார்யவிசேஷத்திற்காக பத்துதினங்கள் இரவே உண்டாகாமல் செய்தவளென்றும் பெருமை பெற்ற அநஸூயாதேவியும், நாட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும் தன் கணவனிடம் ஸ்த்ரீகள் ப்ரீதியே செலுத்தவேண்டும். கணவன் நல்லவனாகவுமிருக்கலாம் கெட்டவனாகவுமிருக்கலாம். அதைக் கவனிக்காமல் அவனிடம் அன்புசெலுத்தும் நற்

குணம் படைத்த ஸ்த்ரீகளுக்கு நற்கதிகள் கிட்டும். பணமில்லாதவனுயினும் கெட்ட ஸ்வ பாவமுள்ளவனுயினும் கட்டுப்பாடற்று தன்னிச்சைப்படி நடப்பவனுயினும் கணவனையே உயரிய தெய்வமாக நற்குணமுள்ள பெண்கள் கருதுவார்கள் என்றிவ்வாறு பதிவ்ரதா தர்மங் களை ஸீதைக்கு உபதேசித்தாள். மேலும் திவ்யமான மாலை, புடவை, ஆபரணங்கள், நல்ல வாஸனை பொருந்திய அங்கராகம் இவற்றையும் ஸீதைக்குக் கொடுத்து உபசரித்தாள். பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளையும் ஒருஸமயம் புத்திரர்களாகப் பெற்ற பாக்கியம் படைத்த இம்முனிதம்பதிகள் விஷ்ணுவின் அவதாரமாகப் பிறந்த 'தத்தாத்ரே யன்' என்ற தம் புதல்வன் விவாஹம் செய்துகொள்ளாமலே ஸந்யாஸதர்மத்தை ஏற்றுக் கொண்டு உலகில் தர்மரக்ஷணம் செய்ததை யறிந்தவர்களாகையால் இப்போது விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமபத்ரன் ஸீதாதேவியுடன் க்ருஹஸ்தாச்ரம தர்மங்களை ஏற்றுத் தங் கள் ஆச்ரமம் வந்தபோது, தங்கள் தத்தாத்ரேயனே மனைவியுடன் வந்திருப்பதாக பாவித்து பிள்ளையிடமும் நாட்டுப்பெண்ணிடமும் செலுத்தவேண்டிய ப்ரீதிவிசேஷத்தைச் செலுத்தி ஞர்கள் என்றறியவும். அத்ரி முனிவரின் ஆச்ரமத்தில் ஸ்ரீராமபத்ரன் அன்றிரவு ஸீதை யுடன் தங்கியிருந்தான். மறுநாட்காலையில் அம்முனிதம்பதிகள் 'ராகவ! மனிதர்களைத் தின்னும் ராக்ஷஸர்கள் பல உருவங்களுடன் இங்கு வஸிக்கின்றனர். ஆகையால் தினந் தோறும் பழங்களைக் கொண்டுவருவதற்காக முனிவர்கள் செல்லும் இவ்வழிமூலமாக நீ இக் காட்டைக் கடந்துவிடு' என்று செல்ல அனுமதி யளித்தனர். மகிழ்ச்சியுடன் அவர்களை வணங்கிப்புறப்பட்ட ஸ்ரீராமபத்ரன் தண்டகாவனம் சென்ருன். அங்கு தவம் செய்யும் பல முனிவர்களின் புனிதமான ஆச்ரமங்களைக் கூட்டம் கூட்டமாகக் கண்டு மகிழ்ந்தான். நாணேற்றிய வில்லுடன் முனிவர்களிடம் செல்வது கூடாதெனக்கருதி நாணை வில்லிலிருந்து பிரித்துவிட்டு விநயத்துடன் ஆச்ரமங்களை நோக்கிச் சென்ருன். அங்குள்ள ரிஷிகளும் பல்லாண்டு பாடி ஸ்ரீராமபத்ரனை மரியாதையுடன் எதிர்கொண்டனர். மேலும் 'ராம! உமது தேசத்தில் வாழுமெங்களைக் காக்கவேண்டிய பொறுப்பு உம்மையே சேர்ந்தது. நாட் டிலிருப்பினும் காட்டிலிருப்பினும் நீர்தான் எங்கள் ராஜா. கோபத்தை ஒழித்தும் புலன் களை யடக்கியுமிருக்கும் நாங்கள் தவத்தைச் செல்வமாகக் கருதுபவர்கள். ஆகையால் குழந் தைகளைத் தமப்பன்போலத் தாங்கள் எங்களை எப்போதும் ரக்ஷிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். ஸ்ரீராமபத்ரனும் அம்முனிவர்களின் மனோரதத்தைப் பூர்த்தி செய்தான் என்று.

विराधहरिणशार्दूल! [விராதஹரிணசார்தூல!]

(ப-ரை) விராத — விராதனென்ற பெயருள்ள ராக்ஷஸனுகிய, ஹரிண — மானுக்கு, சார்தூல— புலிபோன்ற (ஸம்ஹாரத்தில்) ஸ்ரீராமபத்ர!

முன் சூர்ணிகையில் பொதுவாக ஸூசிக்கப்பட்ட மஹர்ஷிகளின் மனோரதபூர்த் தியை இச்சூர்ணிகை முதலாய் 'கபுஷ்பிதரிபுபக்ஷ' என்ற சூர்ணிகை வரையுள்ள சூர்ணிகை களில் நம்ஸ்வாமி விசேஷித்து வருணிக்கிருர். அநாயாஸமாய் மானைப் புலி கொல்லுவது போல விராதனென்ற ராக்ஷஸனை ஸ்ரீராமபத்ரன் கொன்ருனென்பது கருத்து

(தொடரும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

13-3-56 ராத்திரி புறப்பட்டு கெம்பிலிக்கு எழுந்தருளினர். 14-3-56ல் கெம்பிலியில் ஸ்ரீகோவிந்தாசாரியர் முதலியவர்கள் திருமஞ்சனமும் டோலையும் செய்வித்து பூர்ணமாக ஆராதித்தார்கள். 14-3-56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீ எம். ஸ்ரீநிவாஸாசாரியர் ப்ரார்த்தனையின்பேரில் மறுபடியும் செங்கல்பட்டிற்கு எழுந்தருளினர். 15-3-56ல் ஸ்ரீ எம். ஸ்ரீநிவாஸாசார்யரது க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். அன்றிரவு புறப்பட்டு புலிப்பாக்கத்திற்கு எழுந்தருளினர். 16-3-56ல் வக்கீல் ஸ்ரீ வேதாந்தாசாரியர் முதலிய அவ்வூர் வாசிகள் தசாவதார மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். அ றிரவு அவ்விடத்திலிருந்து வடக்குப்பட்டிற்கெழுந்தருளினர். 17-3-56ல் வடக்குப்பட்டு பெருமாள் கோவிலில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஸ்ரீதேசிகாசாரியர், ஸ்ரீசிரோமணி சேஷாத்ரிநாதாச்சார் முதலியவர்கள் ஆராதித்தார்கள். மறுநாள் தெற்குத் தெருவில் ஸ்ரீகிருஷ்ணமாசார்யர் க்ருஹத்தில் பெருமாளையும் ஸ்ரீதேசிகாசார்யர் க்ருஹத்தில் ஸ்ரீ அழகியசிங்கரையும் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அவ்வூர் பெருமாள் ஸ்ரீ தேசிகன், ஸ்ரீஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மூவருக்கும் வீதி உத்ஸவமும் நன்றாய் செய்துவைத்தார்கள். டோலோத்ஸவமும் கோயிலில் முதல்நாள் பண்ணிவைத்தார்கள். 18-3-56 ராத்திரி புறப்பட்டு அங்கிருந்து ஸ்ரீராமானுஜாசரியர், ஸ்ரீநரஸிம்ஹாசாரியர் முதலியவர்கள் விசேஷ ப்ரார்த்தனையின்பேரில் ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீஅஹோபில மடத்திற்கு எழுந்தருளினர். வடக்குப்பட்டிலேயே அவர்கள் 'எம்பெருமானை மங்களாசாஸனம் பண்ணவேண்டும் திருவுள்ளத்திற்கு உகப்பாக நடக்கும்படியாக எல்லா ஏற்பாடுகளும் ஒற்றுமையாக செய்திருக்கிறோம்' என்று விஜ்ஞாபித்தார்கள். அதன்படி நடத்திவிட்டு காலை 10 மணிக்கு கோயில் துரையாருடன் ஸ்ரீஅஹோபிலமடத்திற்கு வந்து மங்களாசாஸனத்திற்கு எழுந்தருள வேணுமென்று ப்ரார்த்தித்ததின்பேரில் கோயிலுக்கு எழுந்தருளியாயிற்று. வழக்கப்படி தோடியில் ஸ்ரீசடாரியை எழுந்தருளப்பண்ணிகொண்டுவந்து மரியாதைகள் நடந்தன. உள்ளே எழுந்தருளி எம்பெருமானையும், ஸ்ரீஆதிகேசவனையும் மங்களாசாஸனம் செய்துகொண்டு எல்லா மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு வீதிவலமாக ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளியாயிற்று. அன்று ராத்ரி புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள திருவுள்ளூருக்கு 11-30 மணிக்கு எழுந்தருளினர். திருவுள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸன்னிதி ஏஜண்ட் ஸ்ரீ கோபாலஸ்வாமி அய்யங்கார் முதலிய கோயில் சார்பார் அடங்கலும், ஊராரும் பெரியகுப்பத்திற்கு வந்து அரசனை சத்ர சாமரம், வாத்யம் வாணம்மத்தாப்புக்களுடன் எதிர்கொண்டழைத்தார்கள். ஏஜண்ட் ஸ்ரீகோபாலஸ்வாமி ஐயங்காரகத்தில்எழுந்தருளிஅபிகமனாராதனம் பண்ணிக்கொண்டு அங்கிருந்தே மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தபடியால் 20-3-56 காலை அவ்விடம் அபிகமன ஆராதனம் நடந்தது பிறகு காலை 9 மணிக்கு ஸ்ரீவீரராகவன் ஸ்ரீசடாரியை வழக்கப்படி தண்டிகையில் சத்ர, சாமர, வாத்யங்களுடன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அனந்தகோத்து பரிஜனங்களும் ஊராரும் அவ்விடம் வந்து, பரியட்டம், மாலை, பப்ளிதுப்பட்டி சாதரா, சால்வை முதலியவைகளை சாத்தி ஸ்ரீசடாரியும் ஸாதித்து வழக்கப்படி மரியாதைகளை செய்வித்து மங்களாசாஸனத்திற்கு எழுந்தருள வேணுமென்று பிரார்த்தித்தார்கள். அங்கிருந்து தந்தப் பல்லக்கில் ஸ்ரீ அழகிய சிங்கரும், தங்கப் பல்லக்கில் ஸ்ரீ

லக்ஷ்மீந்ருஸிம்மனுமாக மாடவீதி வழியாக ஸ்ரீவீரராகவன் ஸன்னிதி வாசலுக்கெழுந்தருளினார்கள். அங்கு ஸ்ரீ அழகியசிங்கர் பல்லக்கினின்றும் இறங்கி ஹ்ருத்தாபநாசநிக்குச் சென்று ஆசமனாதிகளைப் பண்ணிக்கொண்டு கோயிலுக்குள் எழுந்தருளியாயிற்று. பெருமாளை ரங்க மண்டபத்தில் கோலப்படியில் எழுந்தருளப் பண்ணியாயிற்று. த்வஜஸ்தம்பத்தினடியிலும், த்வாரபாலகாதிகள் ஸமீபத்திலும் ப்ரணாமங்களைச்செய்து உட்சென்று திருஎவ்வுள்கிடந்தானை மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. பெருமாளுக்கு விலையுயர்ந்த சால்வையும், பட்டும் ஸமர்ப்பித்தாயிற்று. பிறகு மரியாதைகள் க்ரமமாக ஆனதும் தாயார் ஸன்னிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸனமாகி மரியாதைகளை யதாக்ரமமாக பெற்றுக்கொண்டு மற்றுமுள்ள ஸன்னிதிகளுக்கும் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ப்ருந்தாவனத்தில் மங்களாசாஸனம் செய்துகொண்டு, பிறகு தந்தப்பல்லக்கில் நான்கு ராஜவீதிகளிலும், கனகவல்லிபுரம் தெருவாரின் விசேஷ ப்ரார்த்தனையின் பேரில் அவ்வீதிக்குமெழுந்தருளி மடத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கு பூர்ண கும்பம் ஸமர்ப்பித்து எழுந்தருளப்பண்ணினார்கள். ஸ்ரீஸன்னிதியில் ஆஸனத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியானதும் கோயில் துரையார், அனந்தகொத்து பரிஜனங்களும் தாங்கள் தங்கள் சாவிகளை ஸ்ரீஸன்னிதியில் ஸமர்ப்பித்தார்கள். (எல்லா மிராசும் ஸ்ரீஸன்னிதியைச் சேர்ந்ததாகையால் இவ்விதம் செய்வது வழக்கம்) பிறகு ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தின்பேரில் அவரவர்கள் சாவியை ஸ்ரீகார்யம் ஸ்வாமி எடுத்துக்கொடுத்தார். பிறகு அவரவர்கள் கைங்கர்யத்திற்கு நியமனம் பெற்று, மந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு சென்றார்கள். ஸ்ரீ அழகிய சிங்கர் மடத்திற்கு எழுந்தருளும்போதே, சத்ர, சாமர, வாத்யத்துடன் மாடவீதி வழியாக ஸ்ரீராகவன் அமுது செய்த ப்ரஸாதங்களை வழக்கப்படி கொண்டு ஸமர்ப்பித்தார்கள். ஸாயங்காலம் குளக்கரை ப்ருந்தாவனங்களுக்குச் சென்று எல்லா ஸ்ரீ அழகியசிங்கர்களையும் மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. அன்று ராத்ரி 9 மணிக்கு கோயில் துரையார்கள் ஸ்ரீ ஸன்னிதியில் 'நாளை முதல் தவனோத்ஸவம் ஆரம்பமானபடியால் மஞ்சஸேவை கிடையாது. ஆகையால் இன்று எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. மறுநாட் காலையில் விச்வரூபத்திற்கெழுந்தருள வேணுமென்று விஜ்ஞாபித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும் ஸ்ரீஸன்னிதியில் அபிகமன ஆராதனத்தை முடித்துக்கொண்டு சாற்றுமுறையாகி கோஷ்டிக்கு தீர்த்தம் சடாரியானதும் கோயிலுக்கு எழுந்தருளி ஸ்ரீராகவன் ஸன்னிதியில் விச்வரூபாராதனத்தை நடத்திவைத்தாயிற்று. இவ்விதம் இங்கு எழுந்தருளியிருந்த நாட்களில் தினந்தோறும் நடைபெற்றன. 21-3-56ல் காலை ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமனத்தின்பேரில் 35-வது பட்டம் ஸ்ரீரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகனையும் (களத்தூர் அழகியசிங்கர்) 42-வது பட்டம் ஸ்ரீஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனையும் ஸ்ரீஸன்னிதிக்கு அபிகமன ஆராதனத்தின் போது மங்களாசாஸனத்திற்காக சத்ர, சாமர, வாத்ய கோஷத்துடன் எழுந்தருளப் பண்ணினார்கள். அன்றைய தினம் வக்கீல் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்திற்கு வஸூலான தில்மிகுதியான ரூபாயைக் கொண்டு ஸ்ரீ அழகியசிங்கருடையதாக அன்றுபூராவும் ததீயாராதனாதிகளைச் செய்வித்து யதாசக்தி ஆராதித்தார். த்வாதசியன்று ஸ்ரீ கே. சேஷாசாரியர் ஸ்ரீ எ. டி. துரைசாமி ஐயங்கார் முதலியவர்கள் ஊரில் வ்யாபரித்து ததீயாராதனை செய்துவைத்து யதாசக்தி ஆராதித்தார்கள். தவனோத்ஸவம் மூன்று தினங்களும் ராத்ரி வேளைகளில் பெருமாள் புறப்பாட்டின்போது எழுந்தருளி மங்களாசாஸனமானதும் சேனை முதலியார் ஸன்னிதியில் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு மற்றுமுள்ள மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு எழுந்தருளியாயிற்று. 23-3-56

ராத்ரி 6 மைல் தூரமுள்ள அகரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீரங்காசாரியரும் ஸ்ரீக்ருஷ்ணமாசாரியமும் 2 தினங்கள் பூர்ணமாக ஆராதித்தார்கள். 25-3-56 ராத்ரி 7 மணிக்குள் திருவாராதனுதிகளை முடித்துக்கொண்டு 9.30 மணிக்கு திருவுள்ளூருக்கு எழுந்தருளியாயிற்று. கோயில் துரையார் அனந்தகொத்து பரிஜனங்களும் ஊராரும் தானப்ப நாயகன் மண்டபத்திற்கு ஸ்ரீசடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து மாலை, பரியட்டம், பப்ளிதபட்டி பட்டு சால்வை முதலியவைகள் ஸமர்ப்பித்து முன்போல் மரியாதைகள் பண்ணிவைத்தார்கள். அங்கிருந்து ஸ்ரீஅழகியசிங்கர் தந்தப்பல்லக்கில் பெரிய வீதிகள் வழியாக எழுந்தருளி மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளியாயிற்று. முன் போல் மரியாதைகள் எல்லாம் க்ரமமாக நடந்தன. மறுநாட் காலையில் விச்வரூபத்தின் போது பெருமாளுக்கு பெரியமேதார் சால்வையும், பட்டும் ஸமர்ப்பித்து ஸேவித்துகமகிழ்ந்தாயிற்று. அன்று பங்குனி உத்திர உத்ஸவத்தை ஸ்ரீமங்கலம் ராமானுஜாசார்யர் வழக்கம்போல் நன்ருக நடத்தி வைத்தார். ஸ்ரீ அழகிய சிங்கர் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸந்தோஷத்தால் மிகவும் உத்ஸாஹத்துடன் பெருமாளுக்கு பீதாம்பரமும், தாயாருக்கு பட்டு சேலை முதலியவைகள் ஸமர்ப்பித்தார். தாயார் ஸன்னிதியில் 3 மணிக்கு திருமஞ்சனம் நடக்கும்போது ஸ்ரீ அழகிய சிங்கர் கட்டியம் ஸாதித்தாயிற்று. அன்றும் மறுநாளும் அவ்வப்போது சென்று சேர்த்தியிலும், உத்ஸவாதிகளிலும் ஸேவித்தாயிற்று. பல்லமேவாத்ஸவபர்யந்தம் இங்கேயே எழுந்தருளியிருக்கவேண்டுமென்று ஊராரும், கோயில் கைங்கர்யபரர்களும் ப்ரார்த்தித்தார்கள். 29-3-56 மத்யாஹ்னம் பூந்தமல்லி ஸ்ரீசேஷாசாரியர், ஸ்ரீவேதாந்தராமானுஜாசாரியர் முதலியவக்கீல்கள் நாளையதினமே பூந்தமல்லிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளவேணும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டோம். பிறகு எழுந்தருளுவதானால் உத்ஸாஹம் குறைந்துவிடும் என்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கர் ஸஞ்சாரம் புறப்படுவதை உத்தேசித்து ராத்ரி வழக்கப்படி சிறப்பு தளிகைகள் தேவஸ்தானத்திலிருந்து கொண்டு வந்து ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீஅழகியசிங்கரும் பூந்தமல்லியாரின் ப்ரார்த்தனைக்கிணங்கி 17 மைல் தூரமுள்ள பூந்தமல்லிக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு தசாவதார மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி பூர்ணமாக ஆராதித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் உகக்கும்படி ஸ்ரீஸன்னிதியில் ஏற்பாடு செய்திருப்பதாயும் அவச்யம் எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். பிறகு திருக்கச்சி நம்பிகள் ஸன்னிதிக் கெழுந்தருளியாயிற்று. வழக்கப்படி தேரடியில் ஸ்ரீசடாரியை எழுந்தருளப்பண்ணி வந்து மரியாதை பண்ணினார்கள். திருக்கச்சி நம்பிகளுக்கும், ஸ்ரீரங்கநாதனுக்கும் பட்டுகள் ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. மரியாதைகள் யதாக்ரமம் நடந்தன. அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 4 மைல் தூரமுள்ள பருத்திப்பட்டுக் கெழுந்தருளியாயிற்று. ஸ்ரீ வித்வான் ப. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர் க்ருஹத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். வெள்ளி மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி 31-3-56ல் ஊரார் பூர்ணமாக ஆராதித்தார்கள். அன்று ராத்ரி டாக்டர் ஸ்ரீ ராம ஐயங்கார் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். திருவுள்ளூர் வாஸிகளின் ப்ராத்தனையின் பேரில் அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 16 மைல் தூரமுள்ள தண்ணீர் குளத்திற்கு எழுந்தருளியாயிற்று. தண்ணீர் குளத்தில் திருவஹீந்திரபுரம் ஸ்ரீராஜம்ஐயங்கார்முதலியவர்கள் தசாவதார மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி அபிகமனுராதனத்தை நன்ருக பண்ணிவைத்தார்கள். 1-4-56 காலை அபிகமனுராதனத்தைப் பண்ணிக்கொண்டு 9 மணிக்குப் புறப்பட்டு $4\frac{1}{2}$ மைல் தூரமுள்ள திருவுள்ளூருக் கெழுந்தருளியாயிற்று. காக்களூர் ஏரிகரையிலுள்ள மண்டபத்திற்கு ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியதும் ஸ்ரீராகவன் ஸ்ரீ சடாரியை வழக்கப்படி தண்டிகையில்

எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அனந்த கோத்து பரிஜனங்களும் ஊராரும் வந்திருந்து முன்போல் ஸகலவிதமான மரியாதைகளையும் செய்துவைத்து மங்களாசாஸனத்திற் செழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார்கள். அங்கிருந்து தந்த பல்லக்கில் ஸ்ரீ அழகிய சிங்கர் கனகவல்லி புரம் தெரு வழியாக எழுந்தருளியாயிற்று. பெருமாளுக்கு நீலப்பட்டும் சால்வையும் ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. மரியாதைகள் வழக்கப்படி நடந்தன. பிறகு நான்கு வீதிகளும் ஊர்வலமாக எழுந்தருளி மடத்திற்கு எழுந்தருளியாயிற்று. முன் தடவைகள் போல் கோயிலார் சாவிகளை கொண்டு ஸமர்ப்பித்து ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனம் பெற்றுக்கொண்டு சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீ ராகவனின் ப்ரஸாதங்களையும் வழக்கம்போல் சத்ரசாமராதிகளுடன் கொண்டு ஸமர்ப்பித்தார்கள். அன்று மாலை 3 மணிக்கு புராணம் ஸேவிக்க எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும் சத்ர சாமர வாத்ய கோஷங்களுடன் கோயிலுக்கெழுந்தருளியாயிற்று. பெருமாளை மங்களாசாஸனம் பண்ணியானதும் மாலை பரியட்டம் ஸ்ரீசடாரியாயிற்று. பிறகு தனியன்களை அனுஸந்தித்து புராணத்தை ஸ்ரீ அத்திப்பட்டு ஸ்ரீ அழகிய சிங்கர் வ்யாக்யானத்துடன் ஸேவித்தாயிற்று. ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் பூர்வாச்ரமத்தில் அதிஸரளமாயும் அநேக சாஸ்த்ரார்த்த கர்ப்பிதமாயும் அர்த்த புஷ்டியுடையதுமான வ்யாக்யானத்தை செய்தருளியாயிருக்கிறது. அதை 41-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் அச்சிடும்போது நம் ஸ்ரீ அழகிய சிங்கர் பூர்வாச்ரமத்தில் அதைச் சோதித்து அதற்கு பூமிகை எழுதியாயிருக்கின்றது. ஸேவிக்கும்போது ஆங்காங்கு விசேஷார்த்தங்களையும் ஸாதிக்கும்படியிருந்தது. தினந்தோறும் 2 மணி காலம் புராணம் ஸேவித்தாயிற்று. வஸுமதி கல்யாணத்தன்று விசேஷ ஸம்பாவனையும் செய்தருளியாயிற்று. உத்திராட தினத்தன்று ஸ்ரீ 42-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரை ப்ருந்தாவனத்திலிருந்து (ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனை) ஸ்ரீஸன்னிதிக்குமங்களாஸாஸனத்திற்குஎழுந்தருளப்பண்ணிக்கொண்டுவரும்படி நியமித்தாயிற்று. அபிகமனஆராதனகாலத்தில்எழுந்தருளப்பண்ணினார்கள். அன்று ராத்ரி திருவாராதனம் நடந்ததும் சத்ர, சாமர வாத்ய கோஷங்களுடனும் பாணம் மத்தாப்புக்களுடன் ஸ்ரீப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளப்பண்ணினார்கள். மாதா மாதப்போல் ராத்ரி அங்கு சாற்றுமுறை விசேஷமாக நடந்தது. 5வ சாற்றுமுறை தினம் சென்னையிலிருந்தும் மற்றும் சுற்றுப் புறங்களிலிருந்தும் அனேகம் பேர் வந்திருந்தார்கள். புராணம் ஸேவித்து சாற்றுமுறையானதும் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு மாலை, பரிபட்டம், பப்ளிதுப்பட்டி, சாதரா, சால்வை முதலியவைகள் சாத்தி மரியாதைகள் வழக்கம்போல் நடந்தன. பிறகு தந்த பல்லக்கில் சத்ரசாமர வாத்யகோஷங்களுடன் ராஜவீதிகளில் ஊர்வலமாகதேவஸ்தானத்தார் முன்பு மங்களாசாஸன காலங்களில் செய்வித்தபடி ஸ்ரீ மடத்திற்கு எழுந்தருளப் பண்ணினார்கள். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை தண்டன் ஸமர்ப்பித்து ஆஸனத்தில் எழுந்தருளியானதும் கோஷ்டிக்கு சந்தன தாம்பூலம் சர்க்கரை முதலியவைகள் வழங்கப்பட்டன. சென்னை வாசிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க அம்பத்தூருக்கு ஸஞ்சாரம் புறப்படுவதற்கு முன் மூலஸ்தானத்தில் பெருமாளையும் தாயாரையும் ஸேவித்துவிட்டு நியமனம் பெற்று புறப்பட்டாயிற்று. அவ்வமயம் முன்புபோல் ஸகலமரியாதைகளும் செய்யப்பட்டன. ராத்ரி 10-30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 17 மைல் தூரமுள்ள அம்பத்தூருக்கு 6-4-5'ல் எழுந்தருளியாயிற்று. அம்பத்தூரில் ஸ்ரீ ரங்கசாமி ஐபங்கார் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலியவர்கள் கண்ணன் பல்லக்கில் (மண்டபத்தில்) பெருமாளை எழுந்தருளப்பண்ணி டோலோத்ஸவமும் நடத்திவைத்தார்கள். 6-4-56 இரவு புறப்பட்டு நுங்கம்பாக்கம் வழியாக பழைய மாம்பலம் ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலைக்கு எழுந்தருளினார். நுங்கம்பாக்கம் வாசிகளெல்லோரும்

விசேஷ உபகாரம் ஸமர்ப்பித்து சேவித்தார்கள். மாப்பலம் பாடசாலையில் ஸ்ரீமான் ஸந்தானமய்யங்கார், சக்ரவர்த்தியாசாரியர் இவர்கள் முயற்சியில் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. முழுவதும் பந்தல் போட்டு மடப்பள்ளிக்கும் சௌகர்யம் செய்து வைத்திருந்தார்கள். பெருமாளும் புதிதாகக்கட்டப்பட்டு வரும் பாடசாலை முன் புறத்தில் உயரத்தில் எழுந்தருளியிருந்தது மிகவும் பொருத்தமாயிருந்தது. 8–4–56 துவாதசி தினம் பந்தல் பூராவும் கொஞ்சமேனும் இடமில்லாமல் பலபேர் சேவார்த்திகள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வந்திருந்தார்கள். ஊாருடைய ப்ரயத்தினத்தின் பேரில் அன்று சாயங்காலம் 5 மணிக்குஸ்ரீ அழகியசிங்கர் நாம் புண்யமான பாரத தேசத்தை சேர்ந்தவர்களென்பதை ஒவ்வொருவரும் மனத்தில் வைத்துக்கொண்டு பழைமையான ஆசாரத்தை விட்டு விடக்கூடாது. முக்யமாக குடுமி வைத்துக்கொள்வதை யாவரும் தவிர்க்கக்கூடாது அவசியம் அதைக் கைக்கொள்ளவேண்டுமென்பதை விபரமாக ஸாதித்தருளினர். ராத்திரி டோலோத்ஸவம் நடந்தது. ஸாயங்காலம் பிரதோஷ ஆராதனமும் நடந்தது. விசேஷ ஜனங்கள் பெருமாளை சேவித்துப் போனர்கள். ஸ்ரீ அழகிய சிங்கர் பாடசாலைக்கு அடுத்துள்ளமாம்பலம்நாகை ஸ்ரீவாசுதேவாச்சாரியர் க்ருஹத்தில் அவருடைய குமாரரும் பேரனும் இருக்கும் க்ருஹத்தில் எழுந்தருளியிருந்தார். 9–4–56 ராத்திரி பெருமாளை தசாவதார மண்டபத்தில்எழுந்தருளப்பண்ணிஆராதிக்கப் பிரார்த்தித்ததின்பேரில் அன்று அங்கு எழுந்தருளி ஆராதனம் நடந்தது. பிறகு சைதாப்பேட்டைக்கு எழுந்தருளினர்.

(தொடரும்)

ஸம்சய பரிஹாரம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் மன்மத ஹூ பங்குனி மாத ஸஞ்சிகையில் 76- வது பக்கத்தில் இருக்கும் 'பக்ஷிண்யாசௌசவிஷயஸம்சயம்' என்கிற தலையங்கத்தின் கீழ் கேட்ட கேள்விக்கு இவ்விதம் விடையளிக்கலாம்.

பக்ஷிணி என்னும் சொல்லுக்கு ஆசௌச க்ரந்தங்களில் இரண்டு பகல்களும் ஓர் இரவும், அல்லது இரண்டு இரவுகளும் ஒரு பகலும் உள்ள காலம் என்று அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. ஓர் ஆசௌச க்ரந்தத்தில் பூர்வாபரஸந்தியைகள் $7\frac{1}{2}$ நாழிகைகள் போக த்ரியாமை என்று வ்யவஹரிக்கப்பட்ட ராத்ரியில் த்ருதீயாம்சத்தில் ஜனனம், ருது ப்ராதுர்பாவம், மரணம் இவை உண்டானல் பரதினம் முதலாகவே தினஸங்கியை கொள்ளவேண்டும் முந்தின இரண்டு அம்சங்களிலேயானல் பூர்வதினம் முதலாகக் கொள்ளவேண்டும். பூர்வ ஸந்தியை நாழிகைகள் $3\frac{3}{4}$. இரண்டு யாமங்களுக்கு 15- நாழிகைகளுமாக சூர்யாஸ்தமயானந்தரம் $18\frac{3}{4}$ நாழிகைக்குள்ளாகவானல் பூர்வதினத்திலே கூடும். ததனந்தரமானல் பரதினமுதலாகக் கொள்ளவேண்டும். இதில் ராத்ரிமானமும் விசாரித்துத் ததநுகுணமாகக் கூட்டவும் கழிக்கவும் வேண்டும் என்று நிர்ணயம் என்றிருக்கிறது.

பிரகிருதத்தில் பக்ஷிண்யாசௌச நிமித்தமான ஒரு நாளிரவு 4- மணியில் மரணம் ராத்ரியின் த்ருதீயாம்சத்தில் ஸம்பவித்ததால் மறுநாள் பூராகவும் அதற்கு மறுநாள் பகல் பூராகவும் தீட்டு காத்து சூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு ஸ்னனம் செய்தால் தீட்டு போகும். மேற்படி பக்ஷிண்யாசௌசிக்கு, 4- மணி முதல் மறுநாள் சூர்யோதயம் வரையில் ஒரு இரவு, அதற்கு மறுநாள் பகல், இரவு ஆக இரண்டு இரவுகளும் ஒரு பகலும் போன பிறகு 3- வது நாள் சூர்யோதயத்தில் ஸ்னனம் செய்தால் தீட்டுப் போய்விடுமென்றும், 4– மணி முதல் 90– நாழிகைகள் தீட்டு காத்து ஸ்னனம் செய்தால் தீட்டுப் போய்விடுமென்றும் சொல்வது ப்ரமாணங்கள் ஆசாரங்கள் இவைகளோடு சேருமா? என்று சிந்திக்கவேண்டும். இதன் விரிவு பிறகு.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீமஹாபாரதஉபந்யாஸங்கள், ஹைதராபாத் ஸிகந்தராபாத்

இங்கு ஹைதராபாத், ஸிகந்தராபாத் நகரில் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிக ஸபையின் சார்பில் ஸிகந்தராபாத் லக்ஷ்மீநாராயணஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீ. உ. வே. கனபாடி தர்மக் 3—வேதார்த்தசேவதி வடுவூர் நரஸிம்ஹாச்சார்யர் ஸ்வாமி (துரைசாமி கனபாடி ஸ்வாமி) 2—12—55 வெள்ளி முதலாரம்பித்து 21—12—55 புதன் வரையில் ஸ்ரீ தர்மபுத்ர பட்டாபிஷேக வைபவத்துடன் முடியும்படி ஸ்ரீ மஹாபாரதப்ரவசநம் செய்தார். ஸ்ரீ ஸ்வாமி வேத மந்த்ரார்த்தங்களையும் நமது வர்ணாச்ரமதர்மங்களையும் நன்றாக ப்ரதிபாதித்து உபந்யஸித்தது எல்லோருடைய மனதையும் நன்கு கவரும்படி இருந்தது.

பிறகு 22—12—55 தினம் ஸிகந்தராபாத் மார்ட்பல்லியில் ஸ்ரீ உ. வே. வெள்ளிமேடு வீரராகவாச்சாரியர் க்ருஹத்தில் ஷ ஸ்வாமியால் ருக்மிணீகல்யாணம் உபந்யஸிக்கப்பட்டது. பிறகு ஸபையின் கார்யதர்சி ஸ்ரீ.உப. E. வீரராகவ அய்யங்கார் ஸ்வாமி க்ருஹத்தில் 23—24—25 தேதிகளில் முறையே ஸீதாகல்யாணம், உபநயநம், பகவந்நாமவைபவம் இவைகளைக் குறித்து ஷ ஸ்வாமி உபந்யஸித்தார்.

இப்படிக்கு
கார்யதர்சிகள்
E. வீரராகவன்
A. அனந்தாச்சாரியர்

ஸ்ரீ நிகமாந்தமஹா
தேசிகஸபா
ஹைதராபாத் ஸ்டேட்

தேரழுந்தூர்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 10- வது வருஷத்திய அகண்ட ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம பாராயண மஹாயஜ்ஞம்

தஞ்சை ஜில்லா தேரழுந்தூர் திவ்யதேசத்தின்கண் திலகமாய் விளங்கும் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் ஷ யூர் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமஸபையார் ஸ்ரீமதழகியசிங்கருடைய கிருபையை முன்னிட்டுக்கொண்டு பிரதி வருஷமும்போல் இவ்வருஷத்திலும் 25—12—55 ல் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி மஹாபுண்யகாலத்தையொட்டி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு வேதகோஷத்துடன் விசேஷத் திருமஞ்சனாதிகள் நடத்தி விதிப்படி கடப்ரதிஷ்டை செய்து உலக க்ஷேமார்த்தமாக பிரார்த்தனைசெய்துகொண்டு மஹாஸங்கல்பாதிகளுடன் 10- வது வருஷத்திய அகண்ட ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமபாராயண மஹாயஜ்ஞத்தை உபக்ரமித்து நடத்தியதுடன், அன்றையதினம் கீதாஜயந்தி தினத்தையொட்டி துடர்ந்து கீதாபாராயணமும், நடத்தப்பட்டது. ஷ இவ்விரு பாராயணங்களும் மறுதினம் 26—12—55 துவாதசி புண்ய தினமான திங்களன்று காலை 7- மணி வரை துடர்ந்து நடந்து திருவீதிகளில் ப்ரதக்ஷிணம் வந்து ஷ பாராயணகோஷ்டி காலை 8—30 மணிக்கு ஸ்ரீ அஹோபிலமடத்தையடைந்ததும், ப்ராகாரத்தில் மந்த்ரபூர்வமான கடம் புறப்பாடாகி ஆஸ்தானத்தை யடைந்ததும், ஸ்ரீ எம்பெருமான்களுக்கு மஹாப்ரோக்ஷணம் நடைபெற்றதும் ஸர்வத்ர கோஷ்டிக்கு கடதீர்த்தமும் மற்றும் பகவத் ப்ரஸாதங்கள் அனைத்தும் விநியோகிக்கப்பட்டது. இந்த ஷ மஹாயஜ்ஞ வைபவத்தை ஸேவிக்க பக்கத்து க்ராமங்களிலிருந்து ஏராளமான ஆஸ்திகர்கள் குழுமி இருந்தார்கள். ஷ பாராயணம் 6, 28, 992, ஆவர்த்தி (ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்) கணக்காகியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

தாஸன்
(ஆத்ரேயம்-கிடாம்பி)
ஆர். லக்ஷ்மீநரஸிம்ஹாச்சாரியர்
காரியதரிசி
ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸபை

தேரழுந்தூர்

ஸ்ரீ:

புத்தக விமர்சம்

யதீந்த்ரமததீபிகை:—

ஸ்ரீ. உப. V. K. ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் தமிழ் உரையுடனும், குறிப்புக்களுடனும், அநுபந்தங்களுடனும் கூடினது—

திருக்குடந்தை வித்வான் ஸ்ரீ. உப. சி. ர. ஸ்ரீநிவாஸ பாட்ராச்சார்யரால் வெளியிடப்பட்டது. விலை ரூ. 3-8-0

ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தின் முக்கிய ப்ரகரண க்ரந்தமான இது தொட்டையாசார்யர் சிஷ்யரான ஸ்ரீநிவாஸாசார்யரால் அருளிச்செய்யப்பட்டது. இது எளிய தமிழ் நடையில் உரைகளுடன் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. விவரமான விஷயஸூசிகைகளுடனும் விசேஷமான அநுபந்தங்களுடனும் கூடிய இப்புத்தகம் ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை தெளிவாக அறிய விரும்புமவர்கள் அவச்யம் படித்தறிய வேண்டியதே. அநுபந்தங்களில் அறிய விஷயங்களும், ஆழ்ந்த கருத்துக்களும் ஸுலபமாக விளக்கப்பட்டிருக்கின்றன. நமது ஸித்தாந்த க்ரந்தங்கள் இம்மாதிரி வெளிவந்தால் அது ஒரு மஹோபகாரம் என்றே நாம் கருதுகிறோம்.

—ॐ—

ஸ்ரீகோபிகாகீதை:—

ஸ்ரீ. உப. வித்வான் சின்னமு ர. ஸ்ரீநிவாஸ பாட்ராச்சார்யரால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துக்களுடன் கூடியது. விலை அணா ஆறு.

ஸ்ரீபாகவதம் 10-வது ஸ்கந்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணகோபிகைளின் ராஸக்ரீடை வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பகவத் பக்தியைப் பரப்பும் இப்பாகத்தை எல்லோருக்கும் ஸுலபமாகத் தெரியும்படி இனிமையான தமிழ் நடையிலும் பதவுரையுடனும் அச்சிட்டு வெளியிட்ட பெருமை ஸ்ரீ. உப. வித்வான் சின்னமு ர. ஸ்ரீநிவாஸ பாட்ராச்சார் ஸ்வாமியைச் சேரும். பல ஸம்ப்ரதாய புஸ்தகங்களையும் ஸ்தோத்ரங்களையும் வெளியிடுவதன் மூலமாக நமது ஸம்ப்ரதாயத்திற்கும் ஸமூஹத்திற்கும் உபகாரம் செய்துவரும் இந்த ஸ்வாமி மேன்மேலும் இம்மாதிரி ப்ரசுரங்களைக் கொடுத்துதவுவார் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமானதே.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ஸ்ரீ உத்தராயணம் - வஸந்த ருது - மேஷமீ 1956 ஏப்ரல் - மேமீ]

13-4-56	சித்திரை மீ 1௳	வெள்ளிக்கிழமை	விஷுபுண்யகாலம்; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்யதிதி; வருஷப்பிறப்பு.
14-4-56	2௳	சனிக்கிழமை	சூன்யதிதி.
16-4-56	4௳	திங்கட்கிழமை	திருவாதிரை; எம்பெருமானார் திருநக்ஷத்ரம். திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவன் சைத்ர ப்ரஹ்மோத்ஸவத்வஜாரோஹணம்.
18-4-56	6௳	புதன்கிழமை	ஸ்ரீ வீரராகவன் கருடோத்ஸவம்.
19-4-56	7௳	வியாழக்கிழமை	நவமி - தசமி திதித்வயம்; ஸ்ரீராமநவமி.
20-4-56	8௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
21-4-56	9௳	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
22-4-56	10௳	ஞாயிற்றுக்கிழமை	திருவள்ளூர் வீராகவன் திருத்தேர். [நக்ஷத்ரம்.
24-4-56	12௳	செவ்வாய்க்கிழமை	○பூர்ணிமை; சித்திரை; மதுரகவியாழ்வார் திரு
25-4-56	13௳	புதன்கிழமை	திருவள்ளூர் ஸ்ரீவீரராகவன் கண்ணாடிப்பல்லக்கு
29-4-56	17௳	ஞாயிற்றுக்கிழமை	பஞ்சமிதிதி.
30-4-56	18௳	திங்கட்கிழமை	அதிதி.
6-5-56	24௳	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி.
9-5-56	27௳	புதன்கிழமை	போதாயன அமாவாஸ்யை.
10-5-56	28௳	வியாழக்கிழமை	●அமாவாஸ்யை.
12-5-56	30௳	சனிக்கிழமை	மேஷ சுக்ல த்விதீயை - த்ருதீயை திதித்வயம்.
13-5-56	31௳	ஞாயிற்றுக்கிழமை	சதுர்த்தி திதி; வ்ருஷபரவி 55-32.

[உத்தராயணம் வஸந்தருது வ்ருஷப மீ]

14-5-56	வைகாசி மீ 1௳	திங்கட்கிழமை	விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
15-5-56	2௳	செவ்வாய்க்கிழமை	சூன்ய திதி.
20-5-56	7௳	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி.
23-5-56	10௳	புதன்கிழமை	விசாகம்; நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்; ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தி.
24-5-56	11௳	வியாழக்கிழமை	சந்த்ரக்ரஹணம்.
26-5-56	13௳	சனிக்கிழமை	கேட்டை; 35-வது பட்டம் ஸ்ரீரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
31-5-56	18௳	வியாழக்கிழமை	அவிட்டம்; 27-வது பட்டம் ஸ்ரீவீரராகவ வேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

குறிப்பு — 24-5-56 வைகாசி மீ 11௳ வியாழக்கிழமை க்ரஹணமாகையால் பூர்ணிமை திதி ச்ராத்தம் மறுநாள் (12௳ வெள்ளிக்கிழமை) அநுஷ்டிக்கவேணும்.